பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 12 செவ்வாய்க்கிழமை (25-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:182

## ஊடகத்துறைப் பிரதியமைச்சர் இன்று வருகிறார்

ஊடகத்துறைப் பிரதியமைச்சர் எம்.எச்.சேகு இஸ்ஸதீன் இன்று யாழ். வருகிறார்.

இந்த விஜயத்தின்போது யாழ்முஸ்லிம் தெருப் பள்ளிவாசல், நல்லூர் கந்தசுவாமி ஆலயம், யாழ்.ஆயர் இல்லம், யாழ்.எவ்.எம்.வானொலி சேவை நிலையம் ஆகியவற்றுக்கு அவர் செல்வார். அத்துடன் யுத்தத்தால் சேதமுற்ற பகுதிகளுக்கும் பிரதிஅமைச்சர் செல்கிறார்.

இந்த விஜயத்தின் போது அருடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமர சிங்க, தமிழ் சேவைப் பொறுப்பாளர் ரி.உருத்திராபதி ஆகியோரும் உடன் வருகின்றனர். (ஒ)

## பாதுகாப்பு வலயப் பிரதேச மக்களது உணவு நிவாரணம் நிறுத்தப்படமாட்டாது!

### யாழ். அரச அதிபர் பத்மநாதன் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே25

அதி உயர் பாதுகாப்பு வலயப்பகுதியை சொந்த இடமாகக் கொண்ட குடும்பங்களின உலர் உணவு நிவாரணம் எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தப்படமாட்டாது.

- இவ்வாறு நேற்று அறிவித்தார் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்.

யாழ். செயலகத்தில் நேற்றுக் கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அரச அதிபர் இதனை அறிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் பெறும் குடும்பங்கள் மற்றும் நிவாரணத்தைப் பெறத் தகுதி இல்லாத குடும்பங்கள் தொடர்பான விடயங்களை அப்போது அவர் விளக்கினார்.

அரச அதிபர் தெரிவித்ததாவது:-

தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களிலும் உறவினர் மற்றும் நண்பர்களின வீடுகளிலும் வசிப்போருக்கும், ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைந்த மாத வருமானம் பெறுவோருக்குமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

அத்துடன், தமது சொந்த வீடுகளில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு அதற்கான (14ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் வந்தார்

நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம் நேற்றிரவு 9 மணியளவில் விமானம் மூலம் கொழும்பு வந்து சேர்ந்தார்.

## கண்காணிப்புக் குழுவுக்கு புதிய பேச்சாளர்

யாழ்ப்பாணம்,மே25

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான அக்னஸ் பிரகடேற்றர் அம்மையார் இம்மாதத்துடன் தமது பணியை முடித்துக்கொண்டு தமது நாடான ஐஸ்லாந்துக்குத் திரும்புகிறார்.

அவரது இடத்துக்கு ஐஸ்லாந்தைச் சேர்ந்த டேஸா பின்போஹா அம்மையார் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் பொறுப்பை ஏற்கின்றார்.

# கருணாவின் பெயரில் அரச படைகளே தாக்குதல்களை வழி நடத்துகின்றன!

## இயக்கத்தைவிட்டு வெளியேறிய சிலரை பயன்படுத்துவதாகப் புலிகள் கடுஞ்சீற்றம்

கொழும்பு,மே25

**கிழக்கில் கருணா குழு என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை அரச படைகளின் ஒரு பிரிவே வழி நடத்தி வருவதாக விடுதலைப் புலிகளின் தலைமைக்குத் தெரிய வந்திருக்கின்றது. இது குறித்து விடுதலைப் புலிகள் கடுஞ்சீற்றம் கொண்டிருக்கின்றார்கள்.**

**புலிகளின் தலைமையோடு நெருங்கிய வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.**

புலிகளின் தலைமைக்கு அஞ்சி ஓடி ஒளிந்துள்ளார் கருணா. அவர் இயக்கத்தை விட்டு ஓடிய சமயம் அவருடன் இயக்கத்தை விட்டு வெளியேறிய பல டசின் உறுப்பினர்கள் கருணாவைப் போன்று சில படைநிலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பதை புலிகளின் தலைமை அறிந்துள்ளது.

அவர்களை வைத்துக்கொண்டே கிழக்கில் இடையிடையே புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்பதும் -

அவர்களுக்குப் பணம் மற்றும் பொருளாசைகளை ஊட்டி அரச படையின் குறிப்பிட்ட சில நபர்களே இத்தாக்குதல்களை வழிநடத்துகின்றனர் (14ஆம் பக்கம் பார்க்க)

## சிவாஜிலிங்கத்தின் அலுவலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!

யாழ்ப்பாணம்,மே25

தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத்தின் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அலுவலகத்தை நேற்று இரவு அடையாளம் தெரியாத சிலர் சேதப்படுத்தினர்.

அலுவலகம் அமைந்துள்ள சுற்றாடலில் நேற்று மாலை மதுபோதையுடன் நடமாடிய இளைஞர்கள் சிலர் அப்பகுதியால் சென்ற யுவதிகளுடன் சேஷ்டையில் ஈடுபட்டனர் என்றும் -

பிரஸ்தாப இளைஞர்களைக் கலைந்து செல்லுமாறு அலுவலகத்தில் இருந்தவர்கள் - கேட்டுக் கொண் (14ஆம் பக்கம் பார்க்க)

### மீள்குடியமர்வு தொடர்பாக

## கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியுடன் மனிதநேய அமைப்பினர் பேச்சு

யாழ்ப்பாணம்,மே25

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக நேற்று மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அதிகாரியைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு கண்காணிப்புக் குழுவின் யாழ்.தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மனித நேய அமைப்புக்களின் சார்பில் தலைவர் சு.பரமநாதன், இணைச் செயலாளர் மா.தர்மரட்ணம் ஆகிய இருவரும் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகப பிரதிநிதியான அனிற்ராவைச் சந்தித் (14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைப் பேராசிரியர் நேற்று மாலை சுட்டுக் கொலை!

### மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் கைவரிசை

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் குமாரவேல் தம்பையா (வயது 48) நேற்று மாலை மட்டக்களப்பு நகரப் பகுதியில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பல்கலைக்கழகத்திலிருந்து பிற்பகல் 3.30 மணியளவில் மட்டு, ஞான சூரியர் சதுக்கத்தில் உள்ள தனது வீட்டிற்குத் திரும்பிய அவர், வெளியே எங்கோ செல்வதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தார். மாலை 4.25 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவரை அழைத்துள்ளனர். கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த பேராசிரியரை நோக்கி அந்த இளைஞர்கள் சுட்டனர் என்று சம்பவத்தை நேரில் கண்ட சிறுவன் ஒருவன் தெரிவித்தான்.

ஆயுததாரிகள் சுட்டதில் பேராசிரியருக்கு முதலில் கையில் காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் தப்பி ஓடுவதற்கு முயன்றுள்ளார். அதன் பின்னர் முதுகில் துப்பாக்கிச்சூடுகள் வீழ்ந்துள்ளன.

சுட்டவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டனர். படுகாயமடைந்த பேராசிரியர் உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். ஆனால், சிகிச்சை பயனளிக்காமல் அங்கு அவர் மரணமானார்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எச்.ஏ.அஜ்மீர், வைத்தியசாலைக்கு சென்று மரணவிசாரணைகளை நடத்தினார். பிரேத பரிசோதனை நடத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார். சடலம் வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப் (14ஆம் பக்கம் பார்க்க)

## உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு: அறிக்கை கோருகிறது உயர்நீதிமன்றம்

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மக்களை மீளக் குடியமர்த்தக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பதனை ஆராய்ந்து தமக்கு அறிவிக்குமாறு உயர் நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உட்பட்ட மூன்று பேர் தாக்கல் செய்த மனித உரிமை மீறல் மனுவை ஆராய்ந்த போது பிரதம நீதியரசர் சரத்.எம்.சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழு இவ்வாறு உத்தர (14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக்குப் பொறுப்பாக விசேட இராணுவப் பதவியில் அதிகாரி!

கொழும்பு,மே25

கிழக்கு மாகாணத்தின் பூரண படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கட்டளைத் தளபதி (Overall Operational Commander) என்ற புதிய இராணுவப் பதவி ஒன்று உருவாக்கப்பட்டு அப்பதவிக்கு மேஜர் ஜெனரல் சாந்த கோட்டேகொட நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இராணுவத் தளபதியும், முப்படைகளினதும், சிரேஷ்ட அதிகாரியுமான லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

இராணுவத் தளபதிக்கு அடுத்து இராணுவத்தின் இரண்டாவது நிலையில் இருக்கும் ஜெனரல் கோட்டேகொட, இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி (Chief of staff) பதவியுடன் இந்தப் புதிய பொறுப்பையும் வகிப்பார்.

யாழ்ப்பாணம், கிழக்கு, வன்னிப் பிரதேசங்களுக்குத் தனித்தனியாகப் பிராந்தியத் தளபதிகள் இருக்கின்றனர். அவர்கள் இருக்கத்தக்கதாக அவர்களுக்கு மேல் - யுத்தம் நடை (14ஆம் பக்கம் பார்க்க)

### அபிவிருத்தி தொடர்பாக

## ஜேர்மனில் நாளை நடக்கும் மாநாட்டில் அரச பிரதிநிதி, புலித்தேவன் பங்குபற்றுவர்

நாளை ஜேர்மன் தலைநகரான பேர்லினில் நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கலந்துரையாடலில் இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சட்ட ஆலோசகர் ஜயம்பதி விக்கிரமரட்னவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அதன் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். ஜேர்மன் வெளிநாட்டு அமைச்சும், பொருளாதார அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இக்கலந்துரையாடலில் இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்கள் பலவும் பங்குபற்றவுள்ளன.

கடந்த கால கோர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற வடக்கு - கிழக்குப் பகுதியை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாக ஆராய்வதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ் விசேட கலந்துரையாடல் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக அமையும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# புலிகள் இயக்கம் மீதான தடை நீடிப்பை இந்தியா மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே25

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை இந்தியாவின் புதிய அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டிருக்கின்றது.

ஈழத்தமிழர்களினதும், தமிழகத்து மக்களினதும் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்திய அரசு இதனைச் செய்ய வேண்டும் என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்திருக்கிறது.

இதுதொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈழத்தமிழ் மக்களின் சுதந்திர விடுதலையினை தமது இலட்சியமாகக் கொண்டு பல்வேறு உயிர்த்தியாகங்களின் மத்தியில் கடந்த இரண்டு தசாப்தங்களாகப் போராடி வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை தமிழ் மக்களிலிருந்து பிரித்து அவர்களைத் தனிமைப்படுத்தி இல்லாதொழிக்கும் பல்வேறு முயற்சிகளில் ஸ்ரீலங்கா அரசானது முனைந்து செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக ஓர் இனத்தின் விடுதலைக்காகப் போராடும் ஒரு விடுதலை அமைப்பினைத் பயங்கரவாதிகள் என முத்திரையிட்டு தடைசெய்து ஏனைய நாடுகளையும் தமது பொய்ப பிரசாரத்தின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பினை தடைசெய்யுமாறு கோரி வந்தது. இதனடிப்படையில் எமது அயல் நாடான இந்தியாவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினையும் தடைசெய்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டின் சமாதான சூழலில் எமது விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தத்தினைப் புரிந்துகொண்ட பல்வேறு உலக நாடுகள் விடுதலைப் புலிகள் மீதான பார்வையினை மாற்றி வருகின்றன. குறிப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பினை உத்தியோகபூர்வமாகத் தமது நாடுகளுக்கு அழைத்தும் சமாதான நடவடிக்கைகளில் தமிழர் தரப்பு நியாயங்களுக்காகக் குரல் கொடுத்தும் வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில்தான் இந்தியாவும் எமது விடுதலைப் போராட்டம் தொடர்பான யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையினை நீக்கி எமது சுதந்திரமான இருப்புக்கு வழிசமைக்கும் என ஈழத்தமிழ் மக்களாகிய நாம் மிகுந்த நம்பிக்கையோடு இருந்தோம். இலங்கைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியின் பின்னால் உள்ள ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் எனற நிலைப்பாடும், 'தமிழகத்தினை பொறுத்தமட்டில் ஈழத்தமிழர் ஆதரவு கூட்டணியின் வெற்றியும் மேலும் வலுவூட்டின. தமிழீழ மக்களும் தமிழக மக்களும் ஒரே சாரப்பட கருத்தொற்றுமையினை கொண்டுள்ளார்கள் என்பதனை நடந்து முடிந்த இலங்கை, இந்திய தேர்தல் முடிவுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்த சூழ்நிலையில் இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தடையை மேலும் 2 ஆண்டுகள் நீடித்தமை மிகுந்த வேதனையினை ஊட்டுவதோடு அதிருப்தியினையும் உண்டுபண்ணுகிறது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே, இந்தியாவில் புதிதாக பதவியேற்றுள்ள அரசு ஈழத்தமிழர்களினதும் தமிழகத்து மக்களினதும் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, உண்மை நிலையினை புரிந்துகொண்டு நசுக்கப்படும் ஓர் இனத்திற்காக போராடும் ஓர் அமைப்பு மீதான தடையினை நீடித்திருப்பது குறித்து, மீள்பரிசீலனை செய்வதோடு ஈழத்தமிழர்களின் சுதந்திரமான சுபீட்சமான வாழ்வுக்கும் தமது ஆதரவினை வழங்குமாறு வேண்டுகின்றோம்.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே25

'சமாதான முன்னெடுப்பும் பெண்களின் பொது வாழ்வு ஈடுபாடும்' என்ற பொருளிலான கருத்தரங்கு நாளை காலை 11 மணியளவில் தேசிய சமாதானப் பேரவையின் திட்டப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது.

### இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,மே25

இலங்கை இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பு செய்வற்கான இறுதித் திகதி ஜுன் மாதம் முதலாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி ஆரம்பமான இந்த ஆள்சேர்ப்பு நடவடிக்கை இன்றுடன் முடிவடைவதாக இருந்தது.

தற்போதைய யுத்தநிறுத்தச் சூழலிலும் இராணுவத்துக்கு ஆள் சேர்ப்புச் செய்யப்படும் திகதி நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

### யாழ்.பிரதேச செயலகப்பிரிவு ஓய்வூதியருக்கு!

ஓய்வூதிய முரண்பாடுகளை அகற்றுவது தொடர்பாக - யாழ்பிரதேச செயலகத்துக்குட்பட்ட - 31.12.1996 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற - முன்னாள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை மட்டும் யாழ்.பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி யாழ்பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

அதிபர்கள், ஆசிரியர்கள் அல்லாத ஓய்வூதியர்கள் தொடர்பு கொளளத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வடக்கு - கிழக்கில் வீடமைப்புத்திட்டத்துக்கு ரூ. 748 கோடி உலகவங்கி வழங்குகிறது

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே25

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சுமார் 748 கோடி ரூபாவை வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான வருமானம் பெறுவோரில் யுத்தத்தின் மூலம் வீடுகள் பாதிகக்கப்பட்டோருக்கு இந்த நிதியுதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 90 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாக சகல மாவட்டங்களுக்கும் தலா 100 வீடுகள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் இந்த வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உலக வங்கியின் நிதியினைக் கொண்டு 420 சதுர அடிக்கு மேற்பட்டதான நிரந்தரக் கூரை உடைய வீட்டை அமைப்பதற்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் வீதம் மூன்று கட்டமாக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதில் முதல் கட்டமாக 30 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் கட்டமாக 60 ஆயிரம் ரூபாவும், இறுதியாக 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்குறிப்பிட்ட அளவு விஸ்தீரணமுடைய வீட்டை அமைப்பதற்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா போதுமானதல்ல என்றும -

அதனை ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதியில் 90 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தை இறுதியாக்குவது தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று இன்று திருகோணமலையில் இடம்பெறுகின்றது.

ஜனாதிபதியின் பேச்சாளரும், புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரீஸ் மற்றும் அரச உயரதிகாரிகள் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில் இக்கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5-ரி)

### 'காலசுரபி' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மே25

யாழ்.பல்கலைக்கழக வரலாற்று கழ்கத்தின் 'காலசுரபி' இதழ் IV இன் வெளியீட்டுவிழா நாளை புதன் கிழமை பிற்பகல் 2மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையை யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றம்பலமும், ஆசியுரைகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோரும் நிகழ்த்துவர்.

நூல் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ச.சத்தியசீலனும் மதிப்பீட்டுரையை பேராசிரியர் வி.சிவசாமியும் நிகழ்த்துவர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நூலை வெளியிட்டுவைக்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமகராஜா முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். (ஐ-5)

## மீன்பிடிக் கட்டுப்பாடுகளை நீக்கும்படி

# தென்மராட்சி தெற்கு மீனவர்கள் ஹரீம் பீரிஸிடம் மகஜர் சமர்ப்பிப்பர்!

தென்மராட்சி தெற்குக் கடலேரியல் கடற்றொழிலில் ஈடுபட விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை நீக்கி இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கடலேரியில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு நாளை யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸிற்கு கோயிலாக்கண்டி கடற்றொழிலாளர் சங்கத்தினர் மகஜர் வழங்கவுள்ளனர்.

தென்மராட்சி தெற்கு கோயிலாக்கண்டி பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்த வேளையில் கடல் பகுதியில் குறிப்பிட்ட அளவுக்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு எல்லைகளும் படையினரால் குறிக்கப்பட்டன.

தற்போது இப்பகுதியில் அனைத்துக் குடும்பங்களும் மீளக்குடியமர்ந்துள்ளன. அத்துடன் மறவன்புலோ கடற்றொழிலாளர்களும் இக்கடலேரியில் மீன்பிடிக்க வருகின்றனர். ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட கடலேரியில் பெரும இடநெருக்கடி உருவாவதுடன் பலருக்கு வருமானம் கிடைக்காத நிலை தினமும் ஏற்பட்டு வருகின்றது. இதனால் மீளக் குடியமர்ந்த மக்கள் மீண்டும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளனர்.

எனவே, இக்கடலேரியில் விதிக்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்டுள்ள தடையை நீக்கி கடலேரியில் மீன்பிடிக்க அனுமதி பெற்றுத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

இப்பகுதி படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியபோது மேலிடத்து உத்தரவு இல்லாமல் எல்லை குறிப்பிட்ட இடத்திற்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்ல அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஒ-117)

# ஜயலத்துக்கு எதிராக நேற்று விசாரணை

கொழும்பு,மே25

புனர்வாழ்வு மற்றும் அகதிகள் மீள்குடியேற்ற விவகாரங்களுக்கான முன்னாள் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. நேற்று குற்றப்புலனாய்வுப்பிரிவு தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோதமாக மாடுகளைக் கடத்திச் சென்ற லொறியொன்றின் உரிமையாளருக்கு உதவி புரிந்தாரா என்பது குறித்து விசாரிக்கவே அவர் அங்கு அழைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாடுகளைக் கடத்திச் சென்றவர் எனக்கூறப்படும் லொறி உரிமையாளரிடம் ஜயலத் ஜயவர்த்தன அமைச்சராகப் பதவி வகித்தபோது அவரால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட கடிதமொன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

# பொலீஸ் அத்துமீறலால் கற்பிட்டியில் பதற்றம்!

## கடையடைப்பு, ரயர்கள் எரிப்பு, போக்குவரத்து ஸ்தம்பிதம்

கற்பிட்டி,மே25

பொலீஸ் ஜீப்பில் மது போதையில் வந்தவர்கள் எனக் கருதப்படும் பொலீஸார் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கற்பிட்டி நகரின் மத்தியில் கட்டடம் ஒன்றுக்கு 'கொங்கிறீட்' போட்டுக்கொண்டிருந்த மேசன்மாரை தாக்கி நையப்புடைத்து, கேவலமான வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்தினர் என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து, நேற்று கற்பிட்டி நகரில் பெரும் பதற்றம் நிலவியது. அங்கு முழு அளவில் கடையடைப்பு இடம்பெற்றது. வீதிகளில் ஆங்காங்கே ரயர்கள் எரிக்கப்பட்டு வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. போக்குவரத்து ஸ்தம்பித்தது. வீதிகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக ஆவேசத்துடன் கூடி நின்ற சமயம் வன்முறை வெடிக்கலாம என அஞ்சப்பட்டது. நகரின் மத்தியில் கூடி நின்ற கூட்டத்தைக் கலைப்பதற்கு பொலீஸார் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்க்கவேண்டியும் நேர்ந்தது.

சம்பந்தப்பட்ட பொலீஸார் முஸ்லிம் சமூகத்தை கேவலப்படுத்தித் திட்டித் தீர்த்ததோடு மேசன் தொழிலாளர்களை சப்பாத்துக் கால்களாலும், தடிகளாலும் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று கூறப்பட்டது. பலத்த காயமடைந்த இரு தொழிலாளர்கள் கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை நடத்தப்படவேண்டும் எனறும், குற்றமிழைத்த பொலீஸார் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கற்பிட்டிப் பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அங்கு பதற்றத்தைத் தணிப்பதற்காக பிரதி பொலீஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி.) வேகொடபல கற்பிட்டி நகரில் நேற்று மதியம் சமரச மாநாடு ஒன்றைக்கூட்டினார். மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சமூகப் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சம்பந்தப்பட்ட தாக்குதல் சம்பவம உண்மையானது எனக் காணப்பட்டால் அதனுடன் தொடர்புபட்ட ஆறு பொலீஸாருக்கும் எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஏ.எஸ்பி. வேகொடபல உறுதி வழங்கினார்.

எனினும், நேற்றுப் பிற்பகல் இந்த சமரச கூட்டத்தின் பின்னரும் கற்பிட்டி மற்றும் சுற்று வட்டாரங்களில் பதற்றம் நீடித்தது. (க)


# கல்முனையில் பரீட்சைக் குளறுபடிகள் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உறுதி!

நடந்து முடிந்த ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சையின் போது கல்முனைப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற முறைகேடுகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஜே.எம்.விஜயசிறி அறிவித்துள்ளார்.

கல்முனை கல்வி மாவட்டத்தில் சில பரீட்சை நிலையங்களில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகத் தனக்கு கிடைத்த பரவலான முறைப்பாடுகளை அடுத்தே, அவர் அது தொடர்பாக பூரண விசாரணைகளை நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கிறார்.

பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற இடங்களுக்கு பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர். குறித்த சில இடங்களில் முறைகேடுகள் நடந்திருப்பதை அக்குழுவினர் கண்டறிந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

இவ்விடயம் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, தவறிழைத்த மாணவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (க)



# பாகற்காய் என்றால் அங்கே படை

# பூசணிக்காய் என்றால் இங்கே படை...

**கமமும் புலமும்**

தயாரிப்பு : ஜெயஸ்ரீ

**வி.பி.சர்மா**

**சா**ப்பாட்டுச் சபைகளிலே சிலர் கூறுவார்களாம் பாகற்காய் என்றால் அங்கே படை; பூசணிக்காய் என்றால் இங்கே படை என்று.

பாகற்காய் என்றால் பொதுவாகப் பலருக்கும் கசப்பு. நாம் உண்ணும் உணவு வகைகளிலே இனிப்பு, உறைப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய அறுசுவைகள் காணப்படும். இவற்றுள் இனிப்புச் சுவையையே பாலர் முதல் வயதானவர்கள் வரை பெரிதும் விரும்புகிறார்கள். பூசணிக்காய் இனிமையானது. பாகற்காய் கசப்பானது. இதனால்தான், சாப்பாட்டுப் பந்திகளில் மேற்கண்டவாறு கூறுவார்கள் என்பது மரபு வழிக்கூற்று.

**நோய்களைக் குறைக்கிறது**

கசப்புச் சுவை எமது நாவிற்கு நற்சுவையூட்டுவதில்லை என்றாலும் உடம்புச் சுகத்திற்கு ஏற்றது. நோய்களைக் கட்டுப்படுத்தும் தன்மை அதற்குண்டு.

நீரிழிவு நோயாளர்களுக்கு பாகற்காய் சிறந்தது. இரத்தத்திலும், சலத்திலும் காணப்படும் சர்க்கரையைக் குறைத்துக் கட்டுப்படுத்தி வைத்திருக்கக் கூடியது. நீரிழிவு நோயாளர்கள் பாகற்காயைப் பச்சையாகப் பிழிந்து சாறாக அருந்துவர்.

நோயாளிகளுக்கு மட்டுமல்ல சிறுபிள்ளைகளுக்கும் குழந்தைகளுக்கும் கூட ஏற்றது. வயிற்றில் காணப்படும் புச்சிகளைப் பாகற்காய் அழித்து விடுகிறது. சிறுவயது முதலே பாகற்காயைச் சாப்பிடப் பழக்கிவிட்டால் வளர்ந்த பின்னரும் அதனைச் சாப்பிடக் கூடியதாக இருக்கும்.

மருத்துவகுணம் கொண்ட பாகற்காயைப் பச்சையாகவும், கறிசமைத்தும், பொரித்தும், வறையாகச் செய்தும் உண்ணலாம். இதன் கசப்புத் தன்மையைப் போக்குவதற்குச் சிலர் கறிசமைக்கும்போது சீனியையும் சேர்க்கிறார்கள். இதனால், பிரயோசனம் இல்லை. கசப்பாகச் சுவைத்தால்தான் பலன் உண்டு.

சைவ சமயத்தவர்கள் விரத காலங்களிலும் திவசம் போன்ற முக்கிய தினங்களிலும் பாகற்காயைத் தவறாது சேர்த்துக்கொள்கின்றார்கள்.

சிங்களத்தில் 'கரவில' என அழைக்கப்படும் பாகற்காய் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவலாகச் செய்கை பண்ணப்பட்டாலும் கூடுதலாகச் செம்மண் பிரதேசங்களிலேயே அதிகம் செய்கை பண்ணப்படுகின்றது. ஏழாலை, குப்பிளான், உரும்பிராய் போன்ற இடங்களில் இது அதிகம் செய்கை பண்ணப்படுகிறது.

**பாகல் இனங்கள்**

பாகலில் இரண்டு இனங்கள் முக்கியமானவை. ஒன்று நாட்டு இனம். மற்றையது காட்டு இனம். அழகான வடிவமைப்புக் கொண்டதும் நீளமானதும் பருத்ததுமாகக் காணப்படுவது நாட்டு இனம் எனக் கூறப்படும். யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வகை இனமே செய்கை பண்ணப்படுகின்றது. அழகான தோற்றமுடையதாகக் காணப்படும் இக்காய்கள் சுமார் ஒரு அடிவரை நீளமுடையதாக இருக்கும். ஒருகாய் சுமார் முக்கால் கிலோ எடையைக் கொண்டிருக்கும். சமைப்பதற்கு ஒன்றிரண்டு காய்கள் போதுமானவை.

**குருவித்தலைப் பாகற்காய்**

மற்றொருவகையான காட்டு இனம் "குருவித்தலைப் பாகற்காய்" என அழைக்கப்படுகின்றது. சிறுகுருவிகளின் தலையைப் போன்று இது சிறிதாகக் காட்சி தரும். பெரும்பாலும் வரட்சியைத் தாங்கக்கூடியதாக இது இருப்பதனால் காட்டுப் பிரதேசங்களில் அதிகமாகக் காணப்படும். வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் போன்ற பிரதேசங்களில் இது அதிகம் வளர்கிறது. இது சிறியதாகவும், நிறைகுறைவாகவும் இருப்பதால் பல பாகற்காய்களைச் சமைக்க வேண்டி இருப்பதால் இதனைப் பலர் விரும்புவதில்லை. ஆனால், சமைத்தால் மிகச் சுவையானது.

**நடுகை பண்ணல்**

இது ஒரு படரும்கொடி இனம். எனவே, கொழுகொம்பு தேவை. வேலி ஓரங்களிலும், வீட்டுக்கூரைகளிலும் மரங்களிலும் இதனைப் படரவிடலாம். தோட்டங்களில் இவற்றுக்குப் பந்தல்கள் இட்டு வளர்க்கிறார்கள். சுமார் மூன்றடி உயரப் பந்தல் இடப்பட்டு படரவிடுவதனால் காய்களைக் கொய்வதற்கு வசதியாக இருக்கும்.

விதைகள் மூலம் இப்பயிர் வளர்கிறது. விலைகூடிய மரக்கறி விதைகளுள் பாகற்காய் விதையும் ஒன்று. எனவே, நாம் பயன்படுத்தும் விதைகள் அனைத்தும் முளைப்பது அவசியமாகிறது. விதைகள் வீணாக அழுகுவதைத் தவிர்க்கவேண்டும்.

விதைகள் அநேகமாகச் செப்ரெம்பர் மாத இறுதியில் நடப்படுகின்றன. அதிக மழையாயின் விதைகள் அழுகிவிடும். மழை குறைவாயின் விதைகள் பாதிப்படையும். எனவே, விதைகளை நல்லமுறையில் முளைக்கச் செய்யப் பொலீத்தீன் உறைகளில் இட்டு அவை முளைத்தபின் தோட்டத்தில் நடலாம்.

பாகல் விதைகள் கடினமான தோலைக் கொண்டவை. இதனால், முளைகள் வெளிவருவதில் பிரச்சினைகள் தோன்றலாம். இதனைத் தவிர்ப்பதற்கு விதைகளை நீரில் ஊறவைத்து எடுத்து நடலாம். ஓர் இரவு முழுவதும் - 12 மணித்தியாலம் வரை ஊறவிடுவது நல்லது. நீரில் ஊறவிட்டபின் விதைகளை ஈரமான துணியில் சுற்றிவைத்தால் 2 அல்லது 3 நாள்களில் முளைகள் வெளிவரும். அதன்பின் அவற்றை எடுத்து நடலாம்.

**நோய்கள்**

பொதுவாக இப்பயிருக்கு நோய்கள் வருவது குறைவு. இவற்றின் இலைகளைத் தாக்கும் பூச்சிகளே அதிகம். சுமார் ஐந்துக்கு மேற்பட்ட வகையான பாகற்பூச்சிகள் இதன் இலைகளையும் காய்களையும் உண்டு, அரித்துச் சேதப்படுத்துவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.


**பூச்சிகளை இனம்காணுங்கள்**

பாகலைப் பழுதாக்கும் பூச்சிகளைச் செய்கையாளர்கள் இனம் கண்டு அவற்றை அழிப்பது அவசியம். "டயபனியா இண்டிகா" என்ற பூச்சியின் குடம்பிகள் (புழு) அதிகமான காய்களைத் துளைத்தும் இலைகளை அரித்தும் சேதமாக்குகின்றன.

இப்பூச்சி ஓர் அந்து வகையைச் சார்ந்தது. சுமார் 3 ச.மீ. அகலமும் 1.5 ச.மீ. நீளமும் உடைய இறக்கைகளைக் கொண்டிருக்கும். வாய்ப்பகுதியில் இரு குஞ்சங்கள் காணப்படும். அவை தொடர்ந்து அசைந்துகொண்டே இருக்கும். பாகல் இலைகளின் கீழ்ப் பகுதியிலேயே இவை பெரும்பாலும் காணப்படும்.

குடம்பி (புழு) இளம் பச்சைநிறம் கொண்டது. இதன் பிற்பகுதியில் வால் போன்ற இரு அமைப்புகள் காணப்படும். உடம்பில் சிறு மயிர்கள் காணப்படும். இது பாகற்காய்களை பிஞ்சு முதல் பழுக்கும்வரை உள்ள பருவம் வரை சேதப்படுத்துகின்றது.

கூட்டுப்புழு செந்நிறமுடையது. ஒரு ச.மீ. நீளமுடையது. இலைகள், காய்கள், சருகுகள், குப்பைகள் போன்ற இடங்களில் இது வாசம் செய்யும். வெளிச்சம் குறைவான பகுதிகளில் கூடுதலாக வாழும். இவை இளமையான விருத்தியடைந்த காய்களை உணவாகக் கொள்கின்றன. காய்களின் விளிம்புகளை அரித்துத் துளைத்து உட்பகுதியை உண்ணும். இளம் விதைகளையும் சேதமாக்கிவிடும். இளம்காய்கள் பாதிக்கப்படும். காய்கள் பூரணமாக வளர்ச்சி காணமாட்டாது.



**பூச்சிகளைக் கட்டுப்படுத்தல்**

குடம்பி (புழு)க்களையும், கூட்டுப் புழுக்களையும் கைகளால் பிடித்து நசுக்கிக் கொன்று அழித்துவிடமுடியும். தோட்டத்தைச் சுத்தமாகவும் களைகள், குப்பைகள் சேராமலும் பார்த்துக்கொள்வதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தலாம். போதியளவு சூரிய வெளிச்சம் படக்கூடியவாறு கொடிகளை பராமரிக்கவேண்டும். தாக்கம் அதிகமாகக் காணப்பட்டால் காபறில எனப்படும் நீரில் கரையும் தூளில் ஒன்று, ஒன்றரைக் கிலோவை ஒரு ஹெக்டேயர் வரையான தோட்டப்பயிர்களுக்கு விசிறிப் பூச்சிகளை அழிக்கலாம். ★

---

# தென்மராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர ஆவனசெய்யுமாறு ரவிராஜ் எம்.பியிடம் கோரிக்கை

## இல்லையேல் மறியற் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கை

தென்மராட்சி,மே25

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அதி உயர்பாதுகாப்பு வலயமாக குறிப்பிட்டுள்ள எழுதுமட்டுவாழ் தெற்கு, கிளாலி, கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர இராணுவத்திடம் அனுமதி பெற்றுத்தருமாறு அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இல்லையேல் ஏ-9 வீதியில் - யாழ் செயலகம், தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் முன்பாக - மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் ரவிராஜ் எம்.பியிடம் மேலும் தெரிவிக்கையில்:-

நாட்டில் அமைதிச் சூழல் ஏற்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் எமது குடியிருப்புகள், தென்னந்தோட்டங்கள் ஆகியவற்றைப் பார்வையிடக்கூட அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

எமது குடியிருப்புகளை விட்டு நாம் வெளியேறி ஐந்து வருடங்கள் சென்றுவிட்டன. தொடர்ந்தும் நாங்கள் இன்னொரு பிரதேசத்தில் அகதிகளாக வாழமுடியாது.

அமைதிச் சூழல் ஏற்பட்ட பின்பு பல பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டபோதிலும், எமது பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமரப் படையினர் அனுமதி மறுப்பதை மனிதஉரிமை மீறும் செயல் என்றே நாம் கருதுகிறோம்.

எனவே, எமது மக்களைச் சொந்தக் குடியிருப்புகளில் மீளக்குடியமர அனுமதி பெற்றுத் தாருங்கள். இல்லையேல் தென்மராட்சிப் பிரதேச மக்கள் மட்டுமல்ல குடாநாட்டு மக்களின் ஒத்துழைப்புடன் வெகுஜனப் போராட்டம் நடத்தி எமது கோரிக்கையை உலகறியச் செய்வோம் என்றனர்.

தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களை மீளக்குடியமர்த்தும் விடயம் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சுடனும் மற்றும் நாடாளுமன்றத்திலும் பல தடவைகள் பேசியதாகவும் படை அதிகாரிகள், உயர் அதிகாரிகள் பலரை அழைத்துவந்து நேரடியாக மக்கள் குடியிருப்புப் பகுதிகளைக் காண்பித்ததாகவும் தெரிவித்த ரவிராஜ் எம்பி. இந்த விடயத்தினை ஜனாதிபதியுடன் நேரடியாகக் கதைத்து முடிவெடுப்பதாகவும் தெரிவித்தார்.

(8-117)

# கூட்டுறவு தினத்தை ஒட்டி மாணவரிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே25

82ஆவது சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தை ஒட்டி யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரை, சித்திரம் மற்றும் வினாவிடைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

தரம் 10-11, 12-13 என இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெறவுள்ளன. வினாவிடைப் போட்டிகள் 4 பேர் கொண்ட குழுக்களுக்கிடையே நடைபெறும்.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்கள் தமது விண்ணப்பங்களை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், கூட்டுறவாளர் வரசிங்கம் மண்டபக் கட்டடத் தொகுதி, 2ஆம் மாடி, இல.12, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவுச் சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

(ஜ-10)

# சைவநெறித் தேர்வு நவம்பரில்

யாழ்ப்பாணம்,மே25

அகில இலங்கைச் சைவநெறித் தேர்வுகள் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்கள், பாடத்திட்டம் என்பன முன்னர் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும், மேலதிக விவரங்களை 66,கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் சைவபரிபாலன சபை அறிவித்துள்ளது.

(10-ரி)

## பருத்தித்துறை துறைமுகத்தில்

# பொருள்களை இறக்குவதற்குப் புதிதாக தொழிலாளரை ஈடுபடுத்துவதில் சிக்கல்

வடமராட்சி,மே25

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் பணிக்குப் பற்றாக்குறையாக உள்ள தொழிலாளர்களுக்குப் பதிலாக புதிய தொழிலாளர்களை அமர்த்துவதில் பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசமே இறக்கும் பணிக்கு தொழிலாளர்களை அமர்த்தி பொருள்களை இறக்கிவருகிறது.

ஏற்கனவே, பணியில் இருந்த தொழிலாளர்கள் வேலையை விட்டுச் சென்றதையடுத்து இறக்கும் பணிக்கு தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் புதிதாக தொழிலாளர்களை அமர்த்தும் பணியை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் மேற்கொண்டது.

எனினும், புதிய தொழிலாளர்கள் உயர் பாதுகாப்பு வலயத்துள் அமைந்துள்ள துறைமுகத்துக்கு சென்று பணியில் ஈடுபட்டு வருவதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெறமுடியாமல் உள்ளது.

இவர்களுக்கான அனுமதிப் பத்திரத்தை யாழ். அரச அதிபரிடம் பெற்று வருமாறு பருத்தித்துறையில் உள்ள படைத்தரப்பு அறிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரங்களைப் பெற யாழ். அரச அதிபரிடம் சென்றால் இது செயலகத்தின் பணியல்ல என்றும் அனுமதிப்பத்திரத்தைத் துறைமுகத்துக்குப் பொறுப்பாகவுள்ள துறைமுக அதிகாரசபையிடம் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.செயலகம் தெரிவித்துள்ளது.

ஆனால், யாழ்.அரச அதிபரிடமே அனுமதிப்பத்திரத்தைப் பெற்று வருமாறு மீண்டும் மீண்டும் படைத்தரப்பு வலியுறுத்தி வருகிறது.

இதனால், என்ன செய்வதெனத் தெரியாத நிலையில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கச் சமாசம் உள்ளது.

பருத்தித்துறை துறைமுகம் முன்னர் யாழ்.செயலக திட்டமிடல் புனர்வாழ்வுப் பிரிவின் பொறுப்பில் இருந்து வந்தது. பின்னர் அண்மையில்தான் இதனை இலங்கைத் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்றுக்கொண்டது. (8-173)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

தரமான Prima Broiler மற்றும் பேட்டுக்குஞ்சுகள் 07.06.2004 பிற்பகல விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm வட்டுக் கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டி பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு),19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர் (32515)

பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் நம்பர் 1 பகிரா இன புறோயிலர் குஞ்சுகளும் 28.05.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No.: 2867, 3529. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.(32548)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய 5'3" உயரமுள்ள அரசபணி புரியும் மணமகளுக்கு 1 இல், 7 இல், 8 இல் பகைச் செவ்வாயுடைய கிரகபாவம் 60 இற்கு மேற்பட்ட அரச அல்லது தனியார் துறையில் பணிபுரியும் பொருததமான மணமகன் தேவை. ஆசிரியர் விரும்பத்தக்கது. சீதன முண்டு. தொடர்பு: விளம்பர இல:2274, மே/பா உதயன. (32272)

### தவறிவிட்டது

வேலணை வடக்கைச் சேர்ந்த திருமதி யோகலட்சுமி சபாநாதன் என பவருடைய தேசிய அ.அட்டை (இல: 516063572V) கோண்டாவிலுக்கும், சுன்னாகத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்தில் ஒப்படைத்துதவவும். (32259)


மூளாய் கிழக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் ரூபிகா என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல: 717391764V), விசேட அடையாள அட்டை என்பன யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். M.கண்ணதாஸ், 7/1, புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (32277)

## சமுர்த்தி மகாசங்கத்துக்கு தளபாடங்கள்

வட்டுக்கோட்டை,மே25

சங்கானை சமுர்த்தி மகா சங்கத்திற்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் இரும்புப் பெட்டகம் என்பன சமுர்த்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய மகாசங்கம் சங்கானைப் பிரதேச செயலகத்தில் அமைய உள்ள போதும் அதிகார சபையில் இருந்து உரிய எழுத்து மூலமான கடிதம் அனுப்பிவைக்கப்படாமையால் மகா சங்கம் இயங்கமுடியாதுள்ளதாகச் சமுர்த்தி முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-161)




02 ஆம் லெப்.மாலதி படையணிப் போராளி மலைமகளின்

# புதிய கதைகள்

வெளியீட்டு விழா

இடம் :- நாவலர் கலாசார மண்டபம்
காலம் :- 26.05.2004 புதன்
நேரம் :- மாலை 3.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கப்டன் வானதி வெளியீட்டகம்,
தமிழீழம்.

(C/35174)

## சாவகச்சேரி தபாலகத்தில் உள்ள 'பக்ஸ்' இயந்திரம் மக்கள் பாவனைக்கு

தென்மராட்சி,மே25

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாதிருந்த 'பக்ஸ்' இயந்திரம் அடுத்தமாதம் முதல் பொதுமக்களின் சேவைக்கு விடப்படவுள்ளது.

அஞ்சல் திணைக்களத்தினரால் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்திற்கு தொலைநகல் இயந்திரம் ஆறு மாதங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் அதற்கான இணைப்பு வழங்கப்படாததால் பயன்படுத்தாமல் வைக்கப்பட்டிருந்தது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபருடன் கலந்துரையாடியதை அடுத்து தொலைநகல் இயந்திரத்தினை உடனடியாக பொதுமக்களின் தேவைக்கு விடுமாறு சாவகச்சேரி அஞ்சல் அதிபருக்கு அஞ்சல்மா அதிபர் அறிவித்துள்ளதாகவும் தற்போது அஞ்சல் அலுவலகத்தில் பயன்படுத்தும் தொலைபேசி இலக்கத்தினை தொலைநகல் இயந்திரத்திற்கும் பயன்படுத்துமாறு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (8-117)

# திருமணநாள் வாழ்த்துகள்



இன்று ஒரு வருட திருமணநிறைவு நாளைக் கொண்டாடும் தம்பதிகள்

திரு .திருமதி

## அருச்சுணன் ஜெயாமதி

இலங்கையைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி அருச்சுணன் ஜெயாமதி தம்பதிகள் இன்று (25-05-2004) தங்களின் ஒருவருட திருமண நிறைவுநாளை ஆஸ்திரேலியாவில் பேர்த் நகரில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.


இவர்களைச் சகல செல்வங்களும் பெற்றுச் சிறப்பாக வாழவேண்டுமென எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்மனையும், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மனையும் வேண்டி நாமும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்தும் நெஞ்சங்கள்:
திருமதி ம.மகேசன் குடும்பம் (ஆஸ்திரேலியா)
திருமதி ம.கார்த்திகேசு குடும்பம் (இலங்கை)

தகவல்: திரு. கா.விக்னேஸ்வரன்,
202/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(32165)(42-11-18-34)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



முகாவில், திரியாய் அம்மன் கோயில், இயக்கச்சிகண்ணகை அம்மன் கோயில் பரம்பரைப் பூசகரும் சிறந்த சமய, சமூகத் தொண்டனுமாகிய

திரு. செல்லையா மண்டலாய் விநாயகமூர்த்தி

- பூசாரி பாலு, சமாதான நீதிவான் -

அவர்கள் 11.02.2004 அன்று யாழ். மாவட்ட நீதிபதி திருமதி S.நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளமையையிட்டு நாம் அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரது சேவை மேன்மேலும் நல்லமுறையில் தொடர எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கிறோம்.

வானன்பதி, அம்பாள் உணவகம், களஞ்சியம்,
கரந்தாய்குளம், பளை.

சி.கனகசிங்கம் குடும்பத்தினர்.

(சி-35159)(34-11-18)

உ
ஓம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் வைகாசித்திங்கள் 13ஆம் நாள் (26.05.2004) புதன்கிழமை பி.ப. 11.30-12.20 (புதியநேரம்) வரை மக நட்சத்திரமும் சிங்கலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்


எமது சகோதரன்
திருநிறை செல்வன்
**குகதாசன்**
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**வேணுகா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில திருமாங்கல்ய தாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அங்கு நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி யோகதாசன்,
திரு.திருமதி செல்வச்சந்திரன்,
செல்வன் ந.கண்ணதாசன்
திருவாதணி,
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.



(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி தில்லையம்பலம்,
திருவாரணி,
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

குறிப்பு: புதன்கிழமை பிற்பகல் 12.35-1.51 (பு.நே.) என்று இருந்த திருமண முகூர்த்தம் முற்பகல் 11.30-12.20 (பு.நே.) என்று மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

(32274)(42-11-18-34)

Dialog GSM

டயலொக்
கையடக்க GSM
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

Sri Murugan
Tele Communication
&Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna,
T.P.:021 222 5392.
Fax: 222 3214.

(C/34285) (26-11-18-34)

# உதயன்

## தவறான சமிக்ஞை

புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளரும் ஜனாதிபதியின் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார்.

அவர், யாழ்ப்பாணத்தில் முக்கியமாக ஆராயும் விடயமும், அந்த விஜயத்தின் முன்னர் வழியில் அவர் கையாளப்போகின்ற விவகாரமும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட முக்கிய அம்சங்கள். இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளுடன் - ஜீவாதார - ஜீவனோபாய - சிக்கல்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவை.

வடக்கு - கிழக்கில் 95 ஆயிரம் வீடுகளை அமைக்கும் உலக வங்கியின் திட்டத்தை இறுதிசெய்யும் உயர் மட்ட மாநாடு ஒன்றில் இன்று திருகோணமலையில் ஹரீம் பீரிஸ் பங்குபற்றுகின்றார்.

அதன் பின்னர் நாளை யாழ். செல்லும் அவர், அங்கு இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரடியாக ஆராய்வார். அதி உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து அவர் விசேடமாகக் கவனிப்பார் என்று தெரிகின்றது.

திருகோணமலையில் இன்று நடைபெறும் கூட்டத்தில், இடம்பெயர்ந்த மக்களுக்கு உலக வங்கி உதவியோடு மீண்டும் வீடு வாசல்களை அமைத்துக் கொடுப்பது பற்றி ஆராய இருப்பதாலும் -

இடம்பெயர்ந்தோரை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள், சிக்கல்கள் குறித்து நாளை யாழ்ப்பாணத்தில் ஆராயப் படவிருப்பதாலுமே, அவை இரண்டும் ஒன்றோடு ஒன்று மிகவும் நெருக்கமாகத் தொடர்புபட்டவை என்று குறிப்பிட்டோம்.

இந்த விடயங்களைக் கையாள்வதற்கான தனி அமைச்சை ஜனாதிபதி தாமே தமது நேரடிக் கண்காணிப்பில் வைத்திருக்கின்றார். அத்தோடு, இந்த விடயங்களைக் கையாள்வதற்குத் தமக்கு மிக நெருக்கமான ஒருவரை திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் அவர் அனுப்பிவைப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விடயங்களில் இரண்டு அடிப்படை அம்சங்கள் உள்ளன.

ஒன்று - இடம்பெயர்ந்த மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையாக இருக்கும் மீள்குடியேற்றம் தொடர்பாகக் கொள்கைரீதியான முடிவுகளை எடுப்பது.

மற்றது - அந்த முடிவுகளை எடுத்த பின்னர் மக்களை மீளக்குடியமர்த்துவது, அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது போன்ற புனரமைப்புப் பணிகளைச் செய்வது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான பிந்திய முயற்சிகள் 2001 டிசெம்பரில் - ஐ.தே.மு. அரசு பதவிக்கு வந்த காலத்தில் - ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் மிகுந்த சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வருவது யாழ். குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலய விவகாரம்தான்.

யாழ். குடாநாட்டில் மக்களின் வாழ்வியலுக்கு ஆதாரமான பல்வேறு வளங்களையும் கொண்ட முப்பது வீத நிலப்பரப்பை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கபளீகரம் செய்து கொண்டு, இடம்பெயர்ந்து, அவல வாழ்க்கையைச் சந்தித்து நிர்க்கதியில் அல்லற்படும் மக்களை, அவர்களது தாயக பூமியில் மீளக்குடியமர விடாமல் படைகள் தடுத்து நிற்பது சர்வதேசக் கண்டனத்துக்கும் உரிய விடயமாகியிருக்கின்றது.

பாதுகாப்புக்குப் பொறுப்பான முழு அதிகாரங்களையும் வைத்திருக்கும் ஜனாதிபதி, தமது விசேட பிரதிநிதி ஒருவரை நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதன் மூலம் இவ்விவகாரத்தில் கொள்கை ரீதியான - ஆக்கபூர்வமான - அல்லலுறும் மக்களுக்கு விடிவு தருகின்ற - நல்லதொரு முடிவை எடுக்க வழி செய்வாராயின் அது விதந்துரைக்கப்படும். அதுமட்டுமல்ல சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் எத்தனங்களுக்கு அது பெரும் உற்சாகத்தையும் ஊக்குவிப்பையும் ஊட்டுவதாகவும் இருக்கும்.

அடுத்தது - பெருந்தொகை நிதியுடன் தொடர்புபட்ட புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் விவகாரம்.

இந்த விவகாரங்களில் இலங்கை அரசுத் தரப்புகளின் செயற்பாடுகள் கடந்த காலங்களில் எந்தச் சீத்துவத்தில் நடந்தேறின, ஊழல்கள் முதல் 'சுத்துமாத்துக்கள்' வரை எவ்வளவு குளறுபடிகள் அரங்கேறின என்பதையெல்லாம் புலிகள் முதல் பல்வேறு தரப்புகள் வரை பலரும் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

இத்தகைய பணிகளை உரிய முன்னுரிமைப்படியும், விரைவாகவும், நேர்சீராகவும் முன்னெடுப்பதற்கே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விரைந்து நிறுவப்பட வேண்டும் என்று புலிகள் இயக்கம் உட்பட தமிழர் தரப்பு முழுவதும் வற்புறுத்தி வருகின்றன. கடந்த பொதுத்தேர்தல் மூலம் தமிழர் தாயக மக்கள் கொடுத்த ஆணையும் அதுவே.

அந்த இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக சபையை அமைக்கும் விவகாரம் தேசிய விடயமாக அலசப்பட்டு வரும் இச்சமயத்தில், அதற்குரிய பொறுப்புக்களைத் தாம் பொறுப்பெடுத்து அவசரமாகச் செய்ய முற்படுவதன் மூலம் தமிழ் மக்களிடம் அரசியல் லாபம் ஈட்டலாம் என ஜனாதிபதி கனவு காண்கின்றார் போலும்.

ஆனால், சமாதான முயற்சிகளுக்கு அது தவறான சமிக்ஞையாகவேபடும் என்பத்தை அவர் உணர்ந்து கொள்வது நல்லது.

# அரசமைப்பை மாற்றி அமைப்பதற்கான நடைமுறைச் செயற்பாடுகளால் அதிருப்தி

கொழும்பு,மே25

அரசியல் சட்டத்தை மாற்றி அமைப்பதற்காக மேற்கொள்ளப் படவிருக்கும் நடைமுறைகளின சட்ட மற்றும் அறிவுபூர்வமானத் தன்மைகள் குறித்தும் பல அரசியல் சட்ட வல்லுநர்களும், பேராசிரியர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கொழும்பில் சிறிலங்கா கைத்தொழில் தொடர்புகள் நிறுவனக்கட்டடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பல அறிஞர்கள் இந்தக்கவலையை வெளியிட்டுள்ளனர்.

மக்களும் அரசியல் திட்டமும் என்ற தலைப்பில் இடம் பெற்ற இக்கருத்தரங்கில் டாக்டர் குமார் ரூப்பசிங்க, டாக்டர் நிகால் விக்கரமசிங்க மற்றும் ரொகான் எதிரிசிங்க போன்றவர்கள் கருத்துரை வழங்கினர்.

டாக்டர் ஜயவிக்ரமவும் எதிரிசிங்கவும் சபையினரின் கேள்விகளுக்கு பதில் அளித்தபோது, தற்போதைய அரசமைப்பில் சில குறைபாடுகள் உண்டு என்பதை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், அக்குறைபாடுகளைச் சரியான முறையில் அணுகுவதன மூலமே திருத்த வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

இப்போது இருக்கும் அரசியல் சட்டத்தை மாற்றியமைப்பதற்காக மேற்கொள்ளப்படவிருக்கும் நடைமுறைகளுக்கு சட்டபூர்வமான ஆதரவு வலு இருக்கிறதா அல்லது அறிவுப் பூர்வமானதாகத் தோன்றுகின்றதா என்பது பற்றி அவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

அரசாங்கங்களைப் போலல்லாது, அரசமைப்புச்சட்டங்கள் நீடித்து நிலைப்பதற்கென உருவாக்கப்படுபவை. அப்படியான நீண்ட ஆயுளை அதற்குப் பெற்றுத் தருவதனால் அது முறையாக சரியான வழியில் உருவாக்கப்படவேண்டும். பல்வேறு மாறுபாடான கருத்துகளையுடையவர்களும் உள்ளடக்கப்பட்டு விரிவான விவாதங்களும் நடத்தப்படவேண்டும். மேலும் அரசமைப்பின் மாற்றங்கள் என்னும் போது தமிழ்த் தேசியப்பிரச்சினையும் அதில் இடம் பெற்றாகவேண்டும்.

தெற்குப் பகுதியில் கிடைத்த ஒரு தீர்ப்பை வைத்துக் கொண்டு அரசியல் அமைப்பை மாற்றுவதானது வடக்கு - கிழக்கு மக்கள் மத்தியில் இருந்து எதிர்மறையான விளைவுகளை உருவாக்கும். அவர்களும் தமது விருப்பத்திற்கு அமைவாக ஒரு அரசியல் யாப்பை உருவாக்கிக்கொள்ளக்கூடும்.

- இவ்வாறு அவர்கள் கருத்து வெளியிட்டார்கள். டாக்டர் ஜயவிக்கரம அக்கூட்டத்தில் மேலும் கருத்து வெளியிடுகையில்:-

ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கும் போது சரியான முறைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும் என்பது சம்பந்தப்பட்ட சகல தரப்பினரிடமும் மக்கள் எதிர்பார்ப்பார்கள். இது ஒருமைப்பாட்டுடனும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று. நாடாளுமன்றத்துக்கு வெளியில் இதைச் செய்ய முடியாதாயின் அது சட்டத்திற்கு மாறான செயலாகும். ஏனென்றால் நாடாளுமன்றம் தனது அதிகாரத்தை வேறு ஓர் அமைபபிடம் கையளிப்பதோ அல்லது நாடாளுமன்றம் தனது சட்டபூர்வ நடவடிக்கையை மேற்கொள்ளாமல் விடுவதோ தடைசெய்யப் பட்டுள்ளது. இந்த அம்சம் அரசியல் சட்டத்தின் 76(1)ஆவது அத்தியாயத்தில் மிகத்தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாற்று வழி**

இந்த நிலையில் அரசுக்குள்ள மிக முக்கிய மாற்றுவழி என்னவென்றால் எதிர்க்கட்சியிலுள்ள மிகப்பெரிய கட்சியான ஐ.தே.கவுடன் அரசியல் சட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கும் எல்லாத் திருத்தங்கள் பற்றியும் விவாதித்து ஓர் ஒப்பந்தத்துக்கு வருவதே இதுவும் நாடாளுமன்றத்துக்குள்ளாகவே செய்யப்பட வேண்டும். அரசியல் சட்டத்திலேயே அதனை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் மாற்றி அமைப்பதற்கான வழி செய்யப் பட்டுள்ளது.

ஒரு புதிய அரசை நிறுவும் நிலையிலிருக்கும் நாடுகள் அரசியல் நிர்ணய சபைகளை உருவாக்கலாம் என்பது சட்ட வல்லுநர்களின் கருத்து. ஓர் இராணுவ ஆட்சி முடிவுக்கு வரும் போது (சூடான்-நிக்காருகுவா) இவ்வாறு நிகழ்வதுண்டு. பிலிப்பைன்சில் நடந்தது போன்று சர்வாதிகாரி ஒருவர் நாட்டைவிட்டு ஓடிப்போகும் போது தென்னாபிரிக்காவைப் போன்று சிறுபான்மை அரசு முடிவுக்குவரும்போது அல்லது இலங்கையில் நடந்தது போல் ஒரு நாடு வெளிநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபடும்போது அல்லது இந்தியா போன்று காலனித்துவத்திலிருந்து விடுபடும் போது புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கிக்கொள்ளலாம்.

பொதுவில் ஒருநாடு மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் சட்ட நிர்வாகத்தை நிலை நாட்டவுமான ஒரு கருவியே அரசியல் சட்டம். ஓர் அரசியல் சட்டமானது குறிப்பிட்ட பெரும்பான்மையோடு திருத்தி அமைக்கப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாகக் கூறிக்கொண்டு நாடாளுமன்றத்திற்கு வெளியில் அதனை செய்வதற்கு முனைவதானது சட்டவிரோதமாகும். அரசமைப்பை சர்வதேச மட்டத்தில் மீறும் செயலாகும். ஜனாதிபதி இதில் சம்பந்தப்படுவாரானால் அரசியல் சடடத்தின் 38ஆவது அத்தியாயத்தின் கீழ் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம்.

- இவ்வாறு பேராசிரியர் ஜயவிக்கிரம தெரிவித்தார்.

## வவுனியாவில் தங்கநகைகள் சனியன்று ஏலவிற்பனை

வவுனியா,மே25

ஹற்றன் நஷனல் வங்கி வவுனியாக்கிளையின் தங்க நகை ஏல விற்பனை எதிர்வரும் 29.05.2004 கலை 9.30 மணிக்கு வங்கிக் கிளையில் நடைபெறும்.

ஏலவிற்பனையில் 31.02.2003 இற்கு முன் அடகுபிடிக்கப் பட்டு மீளப்பெறப்படாத நகைகள் ஏல விற்பனை செய்யப்பட விருப்பதால் சம்பந்தப்பட்ட அடகுதாரர்கள் உடனடியாக அண்மையில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையுடன் தொடர்பு கொண்டு நகைகளை மீளப் பெறவோ அல்லது வட்டியினைச் செலுத்தி புதுப்பிக்கவோ முடியும் என்று முகாமையாளர் எஸ்.ஏ. ஆறுமுகம் அறிவித்துள்ளார். (ஐ)

## பாடசாலைகளின் நிலை, கல்வி நிலை நேரில் ஆராய நிபுணர்குழு வருகை

யாழ்ப்பாணம்,மே25

யுத்தத்தினால் பாதிப்புற்ற குடாநாட்டுப் பாடசாலைகளின் நிலை மற்றும் கல்வி என்பன தொடர்பாக ஆராய்வதற்காக நிபுணர் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான பிரட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் வதிவிடப்பிரதிநிதி செல்வி அஸ்ரிக் பெக்கர் அதன் செயற்றிட்ட முகாமையாளர் ஜனாப் மொஹமட் ஆகிய இருவருமே இன்று வருகைதரவுள்ளனர்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வருகை தரும இவர்கள் யாழ். கல்வி வலய அதிகாரிகளுடன் இணைந்து நாளை புதன்கிழமை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் நிலை அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் நிலை என்பன தொடர்பாக நேரில் தெரிந்து கொள்வதற்காகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்குச் செல்லவுள்ளனர்.

எதிர்வரும் புதன், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் பிரடறிக் ஈபேர்ட் மன்றம், இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் என்பன இணைந்து காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை யாழ். கல்வி வலயத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ள கருத்தரங்கிலும் இவர்கள் கலந்துகொள்வர்.

இருவரையும் வரவேற்கும் முகமாக நாளை மறுதினம் வியாழக கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைத் தலைவி திருமதி ச.ஜெயராஜா தலைமையில் கலை நிகழ்வு ஒன்றும் நடைபெறவுள்ளது.

இக்கலை நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளினதும் அதிபர்கள் இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் சகல கிளைகளின் தலைவர்கள், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் கலந்துகொள்ள அழைக கப்பட்டுள்ளனர் என்று தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார். (ஐ-6)

### நாளை

வைகாசி 13
புதன்கிழமை
(26.05.2004)
திதி : ஸப்தமி
இரவு 9.9 வரை.
நட்சத்திரம் : ஆயிலியம்
பகல் 10.20 வரை.
சுபநேரம்: 4.22 - 5.52
ராகுகாலம்: 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தான் செய்வதை யாரும் கண்டுபிடிக்கப்போவதில்லை என்று வெளிப்படையாகத் திட்டவட்டமாகத் தெரிந்திருக்கும் போது ஒருவன் என்ன செய்கிறானோ, அந்தச் செயலைக் கொண்டு அவனுடைய உண்மையான குணத்தை அறிந்துகொள்ளலாம்.

## ஆசிய அபிவிருத்தி வங்கிக்குழு வியாழனன்று யாழ். வருகின்றது

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் தலைமையிலான உயர் மட்டக் குழுவொன்று நாளைமறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் லிகுன்ஜின், ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் நாயகம் ஜால்வஷெகி, சிரேஷ்ட ஆலோசகர் ஹெராங் வைய், பணிப்பாளர் ரிச்சர்ட் வோகேஸ, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜோன் கூரி, ஆசிய அபிவிருத்தி வங்கியன் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் றொபேட் கோர்டன் றிங்கர், திட்ட நிபுணர் எம். திருச்செல்வம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனர்த்தங்களுக்குப் பின்னான நடவடிக்கைகளின் ஆலோசகர் எஸ்.மனோகரன் மற்றும் வெளிக்கள ஆய்வுத் திணைக்களப் பணிப்பாளர் ஏ.அபயகுணசேகரா ஆகியோர் அடங்கிய குழுவே யாழ். குடாநாடடிற்கு வருகைதரவுள்ளது.

நாளைமறுதினம் வருகைதரும் இக்குழுவினர் சாவகச்சேரி வைத்தியசாலை, வல்லை சிதம்பராக் கல்லூரி ஆகியவற்றில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதிகளைத்திறந்து வைப்பர். தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளையார் மகாவித்தியாலய கட்டடத்திற்கான அடிக்கல்லையும் நடுகை செய்வர்.

அத்துடன், உலக வங்கியின் அனுசரணையுடன் நாவாந்துறையில் அமைக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களையும் பார்வையிடுவர். (ஐ-5-ரி)

## இரணைமடுக் குளப் புனரமைப்புக்கு பத்துக் கோடி ரூபா ஒதுக்கீடு

கிளிநொச்சி இரணைமடுக்குளம் 10 கோடி ரூபா செலவில் முழுமையாகப் புனரமைக்கப்படவுள்ளது.

நியாப் திட்டம் II இன் கீழ் இதனைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதியை உலக வங்கி வழங்க முன்வந்துள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நியாப் திட்டம் II இற்கான கலந்துரையாடலிலே இதுதொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஒரு கிராமத்திற்கு 80 ஆயிரம் ரூபாவீதம் 150 கிராமங்கள் அபிவிருத்தி செய்வதற்கும் இக்கலந்துரையாடலில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் 150 கிராமங்களிலும் வீதிகள், குளங்கள், வாய்க்கால்கள் மற்றும பொதுமண்டபங்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் கடல் நீரேரிகளால் சூழல் மாசடைதல், நீர் உவர்த்தன்மை அடைதல் போன்றவை தொடர்பாக ஆராய்வதற்கும் இத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (10-5)

## படகினுள் இருந்த லாம்பு தவறி வீழ்ந்து எரிந்ததில் மீனவர் படுகாயமடைந்தார்

மீன்பிடிக்கச்சென்ற படகினுள் வைக்கப்பட்டிருந்த 'சூழ்லாம்பு' தட்டுண்டு எரிந்ததில் அதில் சென்று கொண்டிருந்த மீனவர் எரிந்து படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வடமராட்சிக்கடலில் இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை சுப்பர்மடத்தைச்சேர்ந்த எஸ்.ஈஸ்வரன் (வயது-28) என்பவரே படுகாயமடைநதுள்ளார்.

இரவு மீன்பிடிக்கச் செல்லும்போது வெளிச்சத்துக்காகப் படகினுள் வைக்கப்பட்டிருந்த லாம்பு திடீரென வீழ்ந்து பற்றி எரிந்ததாகவும் அதனை அணைப்பதற்கு முயன்றபோதே அவர் எரிந்ததாகவும் கூறப்படுகிறது.

இதன்போது படகின் சில பகுதிகளும், அதில் வைக்கப்பட்டிருந்த வலைகளில் சிலவும் எரிந்துள்ளன. படுகாயமடைந்த மீனவர் தற்போது மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (10-6-173)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

வெற்றிடங்கள் :
கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தாகள்
**JUNIOR SECURITY OFFICERS**

ஆண்கள் / பெண்கள் (இருபாலாரும்)

### தகைமைகள்

(1) க.பொ.த. (சா.த.) ஆறுபாடங்கள் (தமிழ், கணிதம்) உட்பட சித்தி
(2) உயரம் 5' 4" (குறையாமல்)
(3) விளையாட்டுத்துறை வீரர்கள், சாரணர், சென். ஜோன்ஸ அம்புலன்ஸ் பூடையினர் ஆகியோருக்கு விசேட கவனஞ் செலுத்தப்படும்.
(4) நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
(5) வயதெல்லை 18 தொடக்கம் 55 வரை

குறிப்பு: இளைப்பாறிய பொலீஸ் / படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பளம் : ஆரம்பச் சம்பளம் ரூபா 5100/=**

கிராம அலுவலர் பத்திரம் (6 மாதங்கட்கு உட்பட்டது), பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தே.அ.அ., வி.அ.அ., பாடசாலைப பத்திரம் ஆகியவற்றுடன் 29.05.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குப் பிரசன்னமாயிருக்கவும்.

*43. கல்லூரி வீதி.*
*(யாழ்.இந்து மைதானம் முன்பாக)* - பணிப்பாளர்.
*யாழ்ப்பாணம்* (C35190)(40-11-16-32)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 27 - 04 - 1984



மறைவு 11 - 04 - 2004

### அமரர் கந்தசாமி துஷ்யந்த் (துஷி)

எம் இனியவனே - துஷி
பசுமையான நினைவுகள் தந்த நீ - இன்று
அவளை நினைத்து எங்கள்
இதயத்தை பாலைவனமாக்கிச் சென்றாயே !
உயிர் எல்லாம் உன்னில் வைத்தோம்.
அதை உறைய விட்டுச் சென்றாயே !
சொல்லாமல் சென்று விட்ட உன்
நினைவுகள் எம்மை நித்தம் வாட்டுகிறதே !

அன்றும் இன்றும் என்றும் உன் நினைவுடன்...
*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.*

இன்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை எம் இல்லத்தில் நடைபெறும் எம் குலவிளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பின் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- பிரிவால் துயருறும்:
தந்தை,தாய்,
சகோதரர்,சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

*29/29, தேவாலயம் வீதி,*
*ஓட்டுமடம்,*
*யாழ்ப்பாணம்.* (32290)(43-11-16-32)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே25
அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (10)

★ ★ ★

வலி.மேற்கு,மே25
சிந்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று திங் கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.
அடுத்த மாதம் 2ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10-75)

★ ★ ★

அல்லைப்பிட்டி,மே25
அல்லைப்பிட்டி பிலிப்பு நேரியார் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று மாலை 5.30 மணியளவில் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறும்.
திருநாள் திருப்பலி நாளை புதனகிழமை காலை 7மணிக்கு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் ஒப்புக்கொடுககப்படும். (10-ரி)

★ ★ ★

மட்டக்களப்பு கண்ணகை அம்பாள் ஆலயத் திருக்கதவுத் திறப்புவிழா இன்று ஆரம்பமாகின்றது. வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் உள் கதவுத் திறப்புவிழாவில் கோவலனின காலை வெட்டிய நிகழ்வு, கால் வெட்டுத் திருச்சடங்காகக் கொண்டாடப்படும். (ஓ-ரீ)

★ ★ ★

கோப்பாய்தெற்கு, எத்தித்தோட்டம் பரமேஸ்வரா அம்பாள் ஆலய மண்டலாபிஷேகம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெற்று, அடுத்தமாதம் 4 ஆம் திகதி அம்பாளுக்கு சங்காபிஷேகமும் இடம்பெறும்.


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459
(31711)(40)

## நாவல்கள்

செங்கைஆழியானின் புதிய நாவல்கள் போரே நீபோ, வானும் கனல் சொரியும், சாம்பவி, ஈழராஜா எல்லாளன், சூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் மற்றும் கிடுகுவேலி, யானை, குவேனி, காவோலை, ஆச்ச பயணம் போகிறாள். பிரபல புத்தக சாலைகளில் விற்பனையாகின்றன.
*75/10A, பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*
(32286)



NEXT EX GENERATION
TATA நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையம்

**Diploma in Computerised Accounting**
காலம் : 3 மாதம்

தமிழ் விளக்கங்களுடன் கணனி மூல கணக்கியல் மென்பொருள் பயிற்சி
World's friendliest business accounting software
இலவச பாடநூல்கள்
மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும்


**ASIAN COMPUTERS**

இல 2 G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
✆021-222 5677

கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
(கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக)
✆ 0777-878160


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 04 - 05 - 1938



மறைவு 25 - 04 - 2004

### அமரர் வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(கட்டட மேற்பார்வையாளர், காணி அலுவலகம், கச்சேரி - யாழ்ப்பாணம்)

*அன்போடும் பண்போடும் பாசத்தோடும் நேசத்தோடும்*
*வாழ்ந்து மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருததியம் இன்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறுகிறது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*கல்வயல்.* குடும்பத்தினர்.
*சாவகச்சேரி.* (32288)(40-11-16-32)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோக்கிம் பேர்சி யோசேப்பின் தங்கராணி



இளவாலை, போயிட்டியைப் பிறப்பிடமாகவும் தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோக்கிம் பேர்சி யோசேப்பின் தங்கராணி 20.05.2004 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் பாக்கியம் - பெரியபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோக்கிம் - வயலட்டின அன்பு மருமகளும் யோக்கிம் போர்சிவெல்லின் அன்பு மனைவியும் விக்ரர் (நோர்வே), வினித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வின்சன் அன்ரனின் (பிரான்ஸ்) அன்பு மாமியாரும் தங்கராசா (சுவிஸ்), ஜெயம் (நோர்வே), விஜியன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தும்பளையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு போயிட்டி லூர்து அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு போயிட்டி சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சாதவக்கடவை,* யோக்கிம் பேர்சிவெல் (கணவர்)
*தும்பளை, பருத்தித்துறை* (32289)(37-11-16-32)

### நாகமணி கதிர்காமநாதன்

(விதானையார்)



பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும முன்னாள் தீவுப்பகுதி கிராம சேவகரும் ஜேர்மனியில் வசித்தவருமான நாகமணி கதிர்காமநாதன் (விதானையார்) அவர்கள் நேற்று (2004-05-24) திங்கட்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி பராசக்தியின் அன்புக் கணவரும் நாகசுந்தரம்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரரும் பத்மசீலன் (கனடா), திருமதி கோமதி கெனடி (அஞ்சல் அலுவலகம் - திருகோணமலை), ஜெயசீலன் (ஜேர்மனி), புனிதசீலன் (ஜேர்மனி), செல்வி ஹிந்துமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி ரிஷானந்தி (கனடா), கெனடி (உதயன பணிமனை - யாழ்ப்பாணம்), திருமதி கௌசல்யா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் இனியனா (கனடா), விதுஷன், ஜெனி (ஜேர்மனி), திவ்யன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*அஞ்சல் அலுவலக் விடுதி,*
*திருகோணமலை* தகவல்:
*தொ.பே: 026-222 5232* (சி-35180)(11-16-32) குடும்பத்தினர்


## COMPUTER DIPLOMAS



Diploma in Computer Programming
Diploma in Hardware
Diploma in Internet & E-Mail (Network)
Diploma in Engineering Auto CAD
Diploma in Desktop Publishing
Diploma in MS Office
Diploma in Computerized Accounting

Batch I : 05/06/2004
Batch II : 07/06/2004
Batch III: 12/06/2004

STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674
T.V.E.C.

# புதையுண்டுள்ள கண்ணிவெடிகள்

## யுத்த நிறுத்தத்தை மதிக்கமாட்டா...!

குமார் - 14 வயதேயான சிறுவன். தனது குடும்பத்தினருடன் யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவன். அக்குடும்பத்தினர் 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்துசென்று மீண்டும் 1996ஆம் ஆண்டில் திரும்பி வந்திருந்தார்கள்.

"1996ஆம் ஆண்டு மே மாதம் - நாங்கள் எமது வீட்டுக்குத் திரும்பியிருந்தோம். அநேக கட்டிடங்கள் அழிந்துபோயிருந்ததை நாங்கள் கண்டோம். நானும் எனது நண்பர்களும்



எமது பிரதேசத்தின் அழிவுகளைப் பார்ப்பதற்காகச் சென்றோம். நான் முன்னே செல்ல நண்பர்கள் பின் தொடர்ந்தனர்.... அங்கே ஒரு மாமரம் - அதில் நிறைய மாம்பழங்கள் இருந்தன. மாம்பழங்களைப் பறிப்பதற்காக மாமரத்தின் அருகே சென்றேன். பெரிய தொரு வெடிச்சத்தம்... சத்தம் ஓய்ந்தபோது நான், எனது வலது பாதத்தை இழந்திருந்தேன் - அங்கே இருந்தது மிதிவெடிதான்" -

இப்படிக் கூறினான் குமார்.

இது உண்மையில் நிகழ்ந்த ஒன்று. (ஆதாரம் சிறுவர் பாதுகாப்பு நிதியம்) இலங்கையில் கடந்த இரண்டு தசாப்த ஆண்டுகளுக்கு மேலாக நிலவிவருகின்ற உள்நாட்டுப் போரின் விளைவாக எண்ணிலடங்காத கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள புதைக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்ணிவெடிகளினால் போரிடும் தரப்புக்கள் மட்டுமன்றி எவ்வித பாவமுமறியாத அப்பாவி மக்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

### உலகளாவிய பிரச்சினை

கண்ணிவெடி நெருக்கடி என்பது, இன்று உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உலகில் குறிப்பாக 80 இற்கும் அதிகமான நாடுகளில் கண்ணிவெடி நெருக்கடி நிலவுகின்றது. உலகெங்கும் இன்று 600 வகையான நிலக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்று அறியப்பட்டுள்ளது. கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் சதவீதத்தைக் கணக்கில் எடுத்தால் உலகில் மிக அதிகளவில் நிலக் கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ள நாடு இலங்கையே எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் படையினரும் விடுதலைப் புலிகளும் இரண்டு வகையான நிலக் கண்ணிகளை மட்டுமே பயன்படுத்துவதாக தகவல்கள் கூறுகின்றன. பாகிஸ்தான் நாட்டுத் தயாரிப்பு நிலக் கண்ணிவெடிகளும் விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்படும் 'ஜொனி' மிதிவெடிகளுமே அவை ஆகும். இலங்கையில் 20 லட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் 95 சதவீதமானவை வடக்கு - கிழக்குப் பகுதிகளான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களிலே புதைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பின் 2 சத வீதத்தில் நிலக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய நாடுகள் அமைப்பு கூறுகின்றது. அநுராதபுரம், பொலன்நறுவை மற்றும புத்தளம் பிரதேசங்களிலும் சிறு அளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

கண்ணிவெடி மீது, மிதிக்கும்போது ஏற்படும் அமுக்கம் காரணமாக நிலத்தடி மண் சூடாகி, அது வெடித்து மேல்நோக்கி வீசப்படும்போது அந்தக் கண்ணிவெடியை மிதித்த துர்பாக்கியசாலியும் தூக்கி வீசப்படுவார். சாதாரண ரகங்களைச் சேர்ந்த நிலக கண்ணிகள் புதைக்கப்பட்டு 20 வருடங்களுக்கு செயற்றிறன் கொண்டனவாக இருக்கும். அண்மையில் வெளிவந்த தகவல்களின்படி சில ரகங்களைச் சேர்ந்த நிலக்கண்ணிகள் 125 வருடங்கள் வரை செயற்றிறன் கொண்டவை என பாலித அமரசூரியா என்ற சிங்கள எழுத்தாளர் தனது கட்டுரை ஒன்றிலே குறிப்பிட்டுள்ளார். (அதிர்ஷ்டவசமாக அந்த ரகக் கண்ணிகள் இலங்கையில் புதைக்கப்படவில்லை என்றே கூறப்படுகிறது) எனவே, கண்ணிவெடிகளைப் புதைக்கப்பட்ட நிலையிலேயே கைவிடுவது புத்திசாலித்தனமான எண்ணமாக இருக்க முடியாது.

### சிறுவர்களே பாதிப்பு

கண்ணிவெடி அனர்த்தங்களினால் ஏற்படுகின்ற உடல், உள, சூழல் மற்றும் பொருளாதார இழப்புக்கள் ஏராளமானவை. உலகில் ஒவ்வொரு 22 நிமிடங்களுக்கும் ஒருவர் கண்ணிவெடி அனர்த்தத்தினால் அங்கவீனமாகியோ இறந்தோ போகின்றனர் என ஐ.நா. அமைப்புத் தகவல்கள் கூறுகின்றன. இவ்வாறு கண்ணிவெடிகளினால் பாதிக்கப்படுவோரில் 30 முதல் 40 வீதமானோர் 15 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் என்பது வருத்தம் தரும் செய்தியாகும்.

கண்ணிவெடிகளினால் இந்த உலகம் மிகப் பெரிய நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டுள்ளது. ஆரோக்கியமான ஒரு நபரை அங்கவீனராக்குவதோ அல்லது உயிரிழக்கச் செய்வதோ மட்டும் அதனால் ஏற்படும் ஆபத்து அல்ல. வீடுவாசல்களை இழப்பதற்கும் அவற்றை விட்டுப் போவதற்கும் கண்ணிவெடி அனர்த்தங்கள் ஏதுவாக அமைகின்றன. பொருளாதார மையங்களாக விளங்கிய பயிர்செய்கை நிலங்கள் மிதிவெடிப் பிரதேசங்களாக மாறிவிட்டதனால் மக்கள் தமது ஜீவனோபாயத் தொழிலை மேற்கொள்ள முடியாது அரச நிவாரணத்தையும் உதவிகளையும் நம்பி வாழ்க்கை நடத்தவேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கண்ணிவெடி அனர்த்தங்களால் அங்கவீனமானவர்

**இராஜபுத்திரன்**

களுக்கு சுகாதார மருத்துவ சேவைகளுக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலவிடவேண்டியுள்ளது. அத்துடன் இடம்பெயர்ந்தவர்களுக்கும் நிவாரணம் வழங்கவேண்டியுள்ளது. இவற்றால் அபிவிருத்திச் செயல் முறைக்குத் தாக்கம் ஏற்படுகிறது. கண்ணிவெடி அனர்த்தங்களினால் பௌதிக வளங்கள் அழிவும், சூழல் மாசடைவும், உயிர்பல்வகைத் தன்மை அழிவும் ஏற்படுகிறது. அத்துடன் வறுமை, களவு, கொள்ளை போன்ற சமூகச் சீரழிவுகளும் தலை தூக்குகின்றன. ஒட்டுமொத்தத்தில் கண்ணிவெடி அனர்த்தங்கள், மனிதனின் வாழும் உரிமையை (Right to life) மறுதலிக்கின்றன. வடக்கு - கிழக்குப் பிரதேசங்களிலும் அதன் எல்லைப்புறப் பிரதேசங்களிலும் இவ்வாறான மனித உரிமை மீறல்கள் ஏராளமாக ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு மாதமும் ஆகக்குறைந்தது இரண்டு பேராவது கண்ணிவெடி அனர்த்தங்களினால் அங்கவீனராகவோ உயிரிழக்கவோ செய்கிறார்கள் என ஐ.நா. அமைப்புக் கூறுகின்றது. இந்த நிலைமையானது கண்ணிவெடிப் பயன்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டியமையை வலியுறுத்துகின்றது.

ஏனைய வெடிபொருள்களோடு ஒப்பிடுகையில் கண்ணிவெடிகள் மிகவும் மலிவானவை. சாதாரணமாக 3 டொலருக்கு (300 ரூபாவுக்கு) அவற்றைக் கொள்வனவு செய்யலாம் அல்லது உற்பத்தி செய்யலாம். ஆனால், ஒரு கண்ணிவெடியை அகற்றுவதற்கு நூறு டொலர் வரை (10 ஆயிரம் ரூபா) செலுத்தவேண்டியுள்ளது.

1997ஆம் ஆண்டில் கனடாவின் ஒட்டாவா நகரில் கைச்சாத்தான நிலக் கண்ணித் தடை உடன்பாட்டில் (Ottawa Convention) 126 நாடுகள வரை இப்போது கையொப்பம் இட்டுள்ளன. அமெரிக்கா, இதுவரை இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இடவில்லை. இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கையொப்பமிட வேண்டும் எனத் தற்போது வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு கண்ணிவெடியும் அகற்றப்படுகின்ற நேரத்தில் உலகில் 20 கண்ணிவெடிகள் புதைக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் தகவல் கூறுகின்றது. நன்கு அனுபவம உடைய ஒருவரால் நாள் ஒன்றுக்கு சுமார் 20 இல் இருந்து 50 சதுரமீற்றர் நிலப்பரப்பிலேயே கண்ணிவெடிகளை அகற்ற முடியும். இவ்வாறு 2 ஆயிரம் கண்ணிவெடிகள் மீட்கப்படும்போது கண்ணிவெடி அகற்றும் ஒருவர் காயமடைவதாகவும் -

சராசரியாகவும் 5 ஆயிரம் கண்ணிவெடிகள் மீட்கப்படும்போது கண்ணிவெடி அகற்றும் ஒருவர் மரணமடைவதாகவும் -

புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஆக, இலங்கையில் புதைக்கப்பட்டுள்ள 20 லட்சம் கண்ணிவெடிகளையும் முற்றிலுமாக அகற்றி முடிப்பதற்கு குறைந்தது 400 கண்ணிவெடி அகற்றும் நிபுணர்களை காவுகொடுக்க நேரிடலாம். பயிற்சி பெற்ற ஆயிரம் வல்லுநர்களாவது காயமடையக்கூடும்.

உலகில் கண்ணிவெடிகளை அகற்றும் வல்லுநர்கள் ஆயிரத்துக்கும் குறைவாக உள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.


### மூன்று ஆண்டுகாலம் செல்லும்

யாழ். செயலகத்தில் செயற்பட்டு வரும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் கூட்டுச் செயற்பாட்டுப் பிரிவு, யாழ். குடாநாட்டிலுள்ள நிலக் கண்ணிவெடிகளை முற்றிலும் அகற்றுவதற்கு இன்னமும் மூன்று ஆண்டுகள் வரையில் செல்லலாம் எனத் தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் யாழ். குடாநாட்டில் 4 லட்சத்து 48 ஆயிரத்து 648 நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. அதன்படி தீவுப் பகுதிகளில் 190 நிலக் கண்ணிவெடிகளும், யாழ்ப்பாணத்தில் 8 ஆயிரத்து 174 நிலக் கண்ணிவெடிகளும், நல்லூர்ப் பிரதேசத்தில் 8 ஆயிரத்து 931 நிலக் கண்ணிவெடிகளும், தென்மராட்சிப் பிரதேசத்தில் 30 ஆயிரத்து 248 நிலக் கண்ணிவெடிகளும், வடமராட்சியில் 10 ஆயிரத்து 256 நிலக் கண்ணிவெடிகளும், வடமராட்சி கிழக்கில் 3 லட்சத்து 50 ஆயிரத்து 768 நிலக் கண்ணிவெடிகளும், வலிகாமம் தெற்கில் 365 நிலக் கண்ணிவெடிகளும், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் 466 நிலக்கண்ணிவெடிகளும் இதுவரையில் அகற்றப்பட்டுளளதாக யாழ்.செயலகத்தில் இயங்கும் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் கூட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது யுத்த நிறுத்தம் அமுலில் உள்ளது. துப்பாக்கிகள் ஓய்வெடுக்கின்றன.ஆனால், புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளோ, யுத்தம் நிறுத்தப்பட்டபின்னரும் மக்களைப் பலியெடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமை மிக மோசமானது இல்லையா? ❖

### இலங்கையில் மிதிவெடி ஆபத்துக் காணப்படும் பிரதேசங்கள்




---

# மகாபொல நிதி கிடைக்காத பல்கலை.மாணவருக்கு புதிய திட்டம்

கொழும்பு,மே25

'மகாபொல' நிதி கிடைக்காத பல்கலைக்கழக மாணவருக்கான புதிய திட்டமொன்று அரசினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

'மகாபொல' நிதியம், வர்த்தக வாணிபம் மற்றும் நுகர்வோர் விவசாயத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இக்கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளும கலந்துகொண்டனர். இதன்போது 'மகாபொல' நிதியத்தின் கீழ் வழங்கப்படும் சாதாரண தொகைகள் போதுமானதாக இல்லை என மாணவர் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இதனைக் கருத்திற்கொண்ட அமைச்சர் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள 'மகாபொல' மதியுரைக்குழுவிக்கு மாணவப் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொள்வதாக உறுதியளித்தார். (8)

# பவுஸர் மூலம் குடிதண்ணீர்

தென்மராட்சி,மே25

தென்மராட்சி தெற்கில் கைதடி நாவற்குழி, மறவன்புலோ ஆகிய இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களின் குடிதண்ணீர் தேவைகளுக்குப் பிரதேச செயலகத்தினர் பவுஸர் மூலம் வழங்கிவருகின்றனர்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதுவராலயத்தினரால் இப்பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தொட்டிகளில் பவுஸர் மூலம் கொண்டுசெல்லப்படும் தண்ணீர் கடந்த 15ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் படையினரும் பவுஸர் மூலம் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (10-117)

# மீண்டும் மட்டக்களப்பில் தமிழீழக் காவல்துறை!

மட்டக்களப்பு,மே25

மட்டக்களப்பில் தமிழீழக் காவல் துறையினர் மீண்டும் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

கருணா விவகாரத்தைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டிருந்த காவல்துறையினரின் சேவை கடந்த சில தினங்களாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் தமது முறைப்பாடுகளை பழுகாமத்தில் உள்ள காவல்துறை அலுவலகத்தில் பொறுப்பதிகாரி ஸ்ரீகரனிடம் ஒப்படைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக கிழக்கில் சீர்குலைந்திருந்த தமது கட்டமைப்புக்களை புலிகள் மீண்டும் ஒழுங்குபடுத்தி வருகின்றனர். அந்த வகையில் காவல்துறையினர் தமது சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். மிகவிரைவில் தமிழீழ நீதித்துறையின் சேவையும் கிழக்குக்கு விஸ்தரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலுப்பையடிச்சேனையில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமையக கிளை அலுவலகத்தின் நேரடிக்கட்டுபபாட்டின் கீழ் இந்த விஸ்தரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

# கரம்பொன் அன்னை வேளாங்கன்னி
## ஆலயப் பெருவிழா



*பக்தர்களே!*

அன்னையின் 29ஆவது வருடத் திருவிழா இன்று (25-05-2004) மாலை 5.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் செபமாலையும் திருப்பலியும் இடம் பெறும். 29ஆம் திகதி மாலை திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் 30ஆம் திகதி காலை 7.30மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச்சொருப பவனியும் இடம்பெறும்.

வேளாங்கன்னித் தாயின் பக்தர்களே கொடூர இடப்பெயர்வுகளால் சிதறுண்டு இருக்கும் எங்களுக்கு அன்னையின் பரிந்துரை குறைவின்றிக் கிடைக்கும் படியாக திருவிழா நிகழ்வுகளில் கலந்து செபிக்க அன்போடு அழைக்கின்றோம்.

★ *தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். உதவிகள் செய்யவிரும்புவோர் பங்குத் தந்தையுடன் தொடர்புகொள்ளவும்.*

அன்னை வேளாங்கன்னி ஆலயம்,
கரம்பொன்.

விளம்பர அனுசரணை:
**ACD யாழ்ப்பாணம்**

பங்குத்தந்தையும்,
பங்கு மக்களும்.

(C/351253) (42-19-18-26)


## நால்வரைக் கடித்த கட்டாக்காலிநாய்

தென்மராட்சி,மே25

விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைக் கடித்த நாயைத் துரத்திச் சென்ற தாயும், வீதியில் சென்ற ஒருவரும் அதே நாயினால் கடியுண்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை கொடிகாமம் - கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

தர்மலிங்கம் நீலாட்சனி (வயது 5), ரவீந்திரன் கேதுஷா (வயது 2½), ரவீந்திரன் கவிதா (வயது 27), கச்சாய் சந்தியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாஸ்கரன் (வயது 25) ஆகியோரே விசர்நாயினால் கடியுண்டவர்களாவர்.

இதேவேளை வரணி குடமியனைச் சேர்ந்த செல்லத்துரை வினோதன் (வயது-7) என்பவரும் நாயினால் கடியுண்டார்.

இவர்கள் தற்போது சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(10-117)


**A/L 2006**

சங்கீதம்,
நடனம்,
சித்திரம்
வடமராட்சியின் பிரபல
ஆசிரியர்கள்
**ஆரம்பம்:**
29.05.2004 8.00 a.m.
**ORGAN**
இசைப் பயிற்சி புதிய பிரிவு
30.05.2004
3.00 p.m.
ஆரம்பமாகிறது.

**தூரிகை**
ம.ம.வி. வீதி,
நெல்லியடி.
(சி-35157)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னத்துரை கனகசபை**
(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி)
திதி: 25.05.2004

*மூவாண்டு கடந்து நான்காண்டாயிற்று,*
*நூறாண்டாயினும் மாறாதையா*
*உம் நினைவு*
*எம் நெஞ்சில் கசிந்த குருதி இன்னும்*
*காயவில்லை.*

ஈஸ்வரி இல்லம்,
மட்டுவில் தெற்கு.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(32262)(34-18-19-26)

## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
17
-
04
-
1916



இறப்பு
25
-
05
-
1981

**அமரர் கலாநிதி ஆ.தியாகராசா** M.A. M.LITT

(முன்னாள் தேசிய பேரவை உறுப்பினர், முன்னாள் அதிபர், கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், காரைநகர்)

*வெண்ணிற ஆடையும் வெள்ளையுள்ளமும் கள்ளங் கபடமற்ற*
*கசிந்துருகும் மனமும் கைலஞ்சம் தன்னை கனவிலும் அறியாத*
*கருணைக்கடலை கல்வியின் காவலனை காண்பரிய பேரொழியை*
*தமக்கென வாழாது எமக்கென வாழ்ந்த அந்தத் தியாகியை தேடுகின்றோம்.*

*"தவபவனம்",*
*பொன்னம்பலம் வீதி,*
*காரைநகர்.*

உங்களை என்றும் மறவாத மாணவன
**சி.சிவபாதம்** *(வங்கியாளர்).*

(32537) (26-18-19)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
22
-
04
-
1949



விண்ணில்
25
-
05
-
2001

**அமரர் இராயப்பு ஞானேந்திரன்** (ஞானம்)

எங்கள் உயிரான அன்புத் தந்தையே!
ஆறாத வேதனையில் ஆழ்த்திவிட்டு
நீங்கள் துயில்கொண்டு மூன்று வருடங்கள்
ஆகிவிட்டாலும் உங்கள் நினைவுகள்
எம்நெஞ்சில் நிழலாக என்றும் தொடர்கின்றனவே!

4ஆம் வட்டாரம், முள்ளியவளை,
முல்லைத்தீவு.
*தற்போதைய முகவரி:*
15/10, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி ஞா.செபமாலையம்மா
(மனைவி),
பிரபாகரன் (மகன்),
டினோகரன் (மகன் - கனடா).

(32505) (26-18-19)


**PRINCE**

துருப்பிடிக்கா
உலோக சிக்சன் சிங்க்

**பிரின்ஸ்**
**நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்**

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள
ஏனைய கிச்சன் சிங்குகளைவிட
விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்:
**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**
காட்சியறை: 516. ஸ்ரீசங்கராஜ மாவத்தை. கொழும்பு 10. தொலைபேசி: 324261-5. 337283-5. 436779 பெக்ஸ்: 446554
295. காலி வீதி. கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# வம்ச அரசியலை இழக்கும் பண்டா குடும்பம் ஜே.வி.பியாக மாறுகின்றது சுதந்திரக் கட்சி

பிரபல அரசியல் விமர்சகரும் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் அரசறவியல்துறை விரிவுரையாளருமான மு.திருநாவுக்கரசு ஆற்றிய உரையின் தொடர் இது.
கடந்த 9 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சமகால அரசியல் நிலைமை தொடர்பான கருத்தரங்கில் அவர் உரையாற்றினார். அவரது உரையின் மூன் றாவது பகுதி கடந்த 21ஆம் திகதி உதயனில் வெளியானது. இது நான்காவது பகுதி.

எப்போதுமே இந்திய அரசியல் போக்கு ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. இந்திய - இலங்கை நட்பு இந்தியத் தமிழர் நட்பு, இலங்கை-இந்திய முரண்பாடு வேறுவிதமாக மாறியுள்ளது.

இவற்றிற்கூடாக இலங்கையின் வெளியுறவுக் கொள்கை ஒரு புதிய கட்டத்திற்குள் வந்துள்ளது. அது மேற்கையும் கையாளும் இந்தியாவையும் கையாளும் இரண்டையும் கையாளக் கூடிய தகுதியை இலங்கை பெற்றுவிட்டது. அதாவது, சந்திரிகாவின் கட்சி தேர்தலில் வெற்றிபெற்றதும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகச் சில நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என அறிவித்துவிட்டார்.

இப்போது இலங்கை சம்பந்தப்பட்ட வெளியுறவுக் கொள்கை விவகாரத்தில உலகளாவிய வெளியுறவுக் கொள்கை எப்படி வந்ததுவிட்டது என்றால் எங்கும் பிரச்சினைக்குத் தீர்வு சமஷ்டி, சுயாட்சி அல்லது தனிநாடு பிரிந்து செல்லல் இது ஒரு கட்டம்.

இதுவரை காலமும் இலங்கை அரசு என்ன செய்ததென்றால் வெளிநாட்டுச் சக்திகளை நம்பியிருந்தது. தற்போது இந்த வட்டத்துக்குள் சுற்றுகின்றது.

இரண்டையும் கையாளும் தகுதியை ஜே.ஆரைத்தொடர்ந்து தற்போதைய அரசு பெற்றுள்ள வேளையில் இலங்கை தன்னைச் சுற்றி வெளிநாடுகளைச் சுற்றவைப்பதற்குப் பதிலாக வெளிநாடுகளைச் சுற்றித்தான் செல்கிறது.

இது தான் நாம் காணக்கூடிய ஒரு புதிய வட்டம். எப்படியென்றால் இலங்கை ஒரு சுற்றுவட்டத்துக்குள் தனித்து இருக்க முடியாது. எனவே, அது சுற்றித்தான் போகவேண்டியுள்ளது.

அந்தப் போக்கின்படித்தான் தற்போது உலகின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்கின்ற நிலைமைகள் உருவாகியுள்ளன.

இப்படி நிலைமை இல்லையென்றால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒருபோதும் பேச்சுக்கு வரமாட்டார்கள் இது ஒன்று.

இரண்டாவது பிரச்சினை என்னவென்றால் இப்படி உருவாகியுள்ள இந்த அரசியல் சூழலுக்கு உள்நாட்டு அரசியல் எவ்வளவு தூரம் இடம் கொடுக்கின்றது? உள்நாட்டு அரசியல எவ்வளவு தூரம் இருக்கப் போகின்றது?.

இதில் இருக்கக் கூடிய சகிப்புக்கள் எவ்வளவு, என்ன சாதக பாதகச சூழல் உருவாகப் போகின்றது என்பதுதான் பிரச்சினை. ரணில் அரசைவிட சந்திரிகாவின் அரசு தான் சாதகமான அரசு என்று சொல்லுவேன். வெளிப்படையாகப் பார்த்தால் ரணில அரசினால் நன்மை ஏற்பட்டுவிடும் என்று தோன்றும். நான் நல்லவன் கெட்டவன் என்ற அடிப்படையில் பார்க்கவில்லை. சந்திரிகா நல்ல நோக்கோடு செய்யப் போகின்றார் என்று கூறவரவில்லை. இப்போது இருக்கும் அரசியல் தெறிப்புத்தான் குழப்பத்திற்குரிய ஒரேயொரு காரணமாக இருக்கும்.

இலங்கை அரசில் ஏற்பட்டுள்ள பல கட்டங்கள் எவ்வாறு ஒன்றோடொன்று மோதி இந்த நிலைக்கு வருகின்றதென்பதைக் காண்போம்.

பம்பாய்ச் சொத்தின் ஒரு விகார வடிவம் தான் ஜே.வி.பியின் வரலாறு. ஜே.வி.பியின் எழுச்சி என்பது காகத்தின் கூட்டுக்குள் குயில் குஞ்சு பொரிப்பது போன்றது அல்லது விடுதலைப் புலிகளின் கருப்பைக்குள் ஜே.வி.பி. குஞ்சு பொரிப்பது போன்றது.

இது ஓர் தற்செயல் நிகழ்வு அல்ல. தற்செயலாக நிகழக்கூடிய ஒன்றுமல்ல. இதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. பண்டாரநாயக்காவைப் பொறுத்தவரையில் அரசியலில் மிகத் தெளிவாக இருந்தவர்.

## அரசியல் ஆய்வாளர் திருநாவுக்கரசுவின் உரை

இந்தியாவைச் சேர்ந்த பல முக்கிய பிரமுகர்களை பண்டாரநாயக்கா சந்தித்தார். தான் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தபோது அவருக்குச் சில எண்ணங்கள் தோன்றின. இலங்கைக்கு வந்தார் சில முற்போக்கு எண்ணங்களுடன். ஆனால், தனது முற்போக்கு எண்ணங்களை எல்லாம் அவர் விட்டுவிட்டார். தான் ஒரு சந்தர்ப்பவாதி என்ற நிலையிலே விட்டுச்சென்றார்.

கிறிஸ்தவனாக இருந்த பண்டாரநாயக்கா தன்னை பௌத்தனாகமதம மாற்றினார். அப்போதே அவர் நிறம் மாறத் தொடங்கிவிட்டார். சந்தர்ப்பவாதி என்பதற்குரிய முதலாவது அறிகுறி அங்கு தெரிந்தது.

பிரிட்டிஷ்காரருடன் பண்டாரநாயக்கா ஒப்பந்தம் செய்துகொண்டார். எப்போதும் வெளிநாட்டு தலையீடுகளை அவர் நிராகரிக்கவில்லை. பிரித்தானியவுடனான ஒப்பந்தத்தை ஒருபோதும் எதிர்க்கவில்லை.

டி.எஸ்.சேனநாயக்கா செய்துகொண்ட ஒப்பந்தம் பண்டாரநாயக்காவுக்கு தெரியவந்தபோது அவர் கட்சியிலிருந்து வெளியேறினார். ஐக்கிய தேசியக் கடசியின் பலம் வெளிநாட்டு பலம் என்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் அமெரிக்காவும் பிரிட்டனும் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்துவது அமெரிக்காவை வீழத்துவது போன்றதாகும். அப்போதுதான் இரண்டு தளங்களும் அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு வந்துவிட்டார்கள். அப்போது கொள்கை வகுக்கப்படவில்லை.

கொள்கை வகுக்கப்பட்டிருந்தால் 47 ஆம் ஆண்டு தனிக்கட்சி அமைந்து இருக்க வேண்டும். இதுதான் பண்டாரநாயக்காவின் அடுத்த கட்டம்.

மூன்றாவது கட்டம் பிரிட்டனையும் அமெரிக்காவையும் எதிர்க்கவேண்டும் என்றால் இந்தியாவுடன் கூட்டுச் சேரவேண்டும். கூட்டுச்சேர்ந்தார். அணிசேராக் கொள்கையென்றார். பிரிட்டனையும் அமெரிக்காவையும் எதிர்க்கின்ற பாதையில்தான் அவர் தனது அரசியல் தளமிட்டார்.

பண்டாரநாயக்கா நிலமானிய கலாசாரத்தைக் கொண்டவர். மொழிக்காகப் போராடவில்லை. இனத்துக்காகக் கொண்டு வந்தார். அங்கே இனவாதம தோன்றியது.

பண்டாரநாயக்காவின் அனைத்து கொள்கைகளிலும் தேசியம் இருக்கவில்லை. இவர் சந்தர்ப்பவாதி இனவாதத்தைத் தூண்டிவிட்டவர் இவர்தான்.

இந்த நிலையில்தான் பண்டாரநாயக்கா இடதுசாரிகளுடன் கூட்டுசசேர்ந்தார். உள்நாட்டுக் கலாசாரத்தை பேணுவதாகக் கூட்டுச்சேர்ந்தார். பிக்குமாருடன் கூட்டுச்சேர்ந்தார்.

இது கூட்டுச் சாம்பார் போலக் காணப்பட்டது. இந்தக் கூட்டினால் எதனைச் சாதிக்க முடியும்? இடதுசாரிகளை அழித்தது ஐக்கிய தேசியக் கட்சி அல்ல. பண்டாரநாயக்காவின் கொள்கைதான். பண்டாரநாயக்காவின் சூழலுக்குள் இவர்கள் அழிந்து போய்விட்டார்கள்.

புரட்சிகரமான கருத்துக்களை கொண்டவரும் தமிழ் மக்களுக்காக சரியான சிந்தனையைக் கொண்டவரும் ஒருவர் இருக்கின்றார். எந்தத் தமிழ்க்கட்சிகளும் சாதிக்க முடியாததை அவர் தான் சாதித்தார். சண்முகதாஸன் தான் அவர்.

ரஷ்யப் புரட்சியின்போது சுவிஸ ஸ்லாந்திலிருந்து பத்திரிகை நடத்தியவர் இளைஞனாக இருக்கும்போது ஒருமுறை லெனினையும் சந்தித்தார். மிகத் துடிப்பாக இருந்தார். முதலாம் உலக யுத்தத்தை நிராகரித்தார். அவரிடம் தேசிய வெறியிருந்தது.

இடதுசாரிப் பத்திரிகை நடத்திய பின்னர் தேசியப் படையில் சேர்ந்தார். இத்தாலியப் படையில் சேர்ந்து சண்டையின்போது காயமுற்றார். அதன் பின்னர்தான் தேர்தல் கட்சியொன்றினை அந்த இராணுவ வீரர் தொடங்கினார். இந்தக் கட்சி தேர்தலுக்கூடாகவே பதவிக்கு வந்தது.

அக்கட்சியின் அனைத்து அம்சங்களையும் ஜே.வி.பி. கொண்டிருந்தது. லெனினையும் மார்க்ஸையும் பற்றிப் பேசுகின்றது ஜே.வி.பி. அது தான் வித்தியாசம்.

பண்டாரநாயக்காவின் இஸத்துக்குள் எல்லோரும் கரைக்கப்பட்டார்கள். ஜே.வி.பியின் இஸத்துக்குள் பண்டாரநாயக்காக்கள் கரைக்கப்படப் போகின்றார்கள். ஏனென்றால் பண்டாரநாயக்கா பேசிய இனவாதத்தைவிடவும் ஜே.வி.பி. பேசும் இனவாதம் கூடியது. ஜே.வி.பி. தேர்தலில் வெற்றிபெற்ற பின்பு 30 ஆயிரம் படைகளைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

### மகாவலி அமைச்சு விவகாரம்

பண்டாரநாயக்கா டி.எஸ்.சேனநாயக்காவிடம் விவசாய அமைச்சைத தருமாறு கேட்டார். அதற்குப் பிறகுதான் பண்டாரநாயக்கா மக்கள் தொடர்புள்ள அமைச்சைக் கோரினார். பண்டாரநாயக்காவுக்கும் தற்போதைய ஜே.வி.பிக்கும் நிறையத் தொடர்புகள உண்டு. ஜே.வி.பி. தற்போது மகாவலி அமைச்சைக் கேட்டுள்ளது. ஆனால், ஜே.வி.பியின் அந்த அமைச்சு தட்டிக் கழிக்கப்பட்ட விதம் சுவாரசியமானது.

மகாவலி அமைச்சின் கீழ் மூவாயிரம் ஆயுதம் தாங்கிய ஊர்காவற்படையினர் இருந்தனர். இந்த ஊர்காவற்படையினர் ஜே.வி.பியினராக மாறிவிடுவார்கள் என்று கூறி அந்த அமைச்சு தர முடியாது என்று சந்திரிகா கூறியுள்ளார்.

எனென்றால், இந்த மூவாயிரம் பேரைக் கொண்டும் ஜே.வி.பியால் புரட்சி செய்யமுடியாது. ஜே.வி.பி. ஒரு விடயத்தை அழகாகத் திட்டமிட்டுள்ளது. விவசாய அபிவிருத்திக்கென ஒதுக்கப்படுகின்ற மிகப்பெரிய நிதி மகாவலி அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்றது.

அந்த அபிவிருத்திநிதியைப் பயன்படுத்தி தனக்குச் சாதகமான ஓர் ஆளணியைப் பெற ஜே.வி.பி. முயல்கின்றது. மகாவலி அபிவிருத்தியின் மூலமாக ஏனைய விவசாயிகளையும் தன்னிடம் சேர்த்துக்கொள்ள ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளது.

விவசாயிகளின் நண்பன் என்று காட்டும் முயற்சி அதனிடம் உண்டு. அதனால், அதற்குப் பல நன்மைகள் உருவாகும். இதன் மூலம் ஏனைய இடதுசாரிகளையும் தன்பக்கம் இழுப பதே ஜே.வி.பியின் முடிவு.

இப்படியான எண்ணங்களோடு சந்திரிகாவுடன் எப்படி ஜே.வி.பியினர் இருக்கமுடியும்.

சந்திரிக்கா கூறினார், நீங்கள் ஆயுதம் தாங்கிய அமைப்பில் இருந்தவர்களாம். நீங்கள் மீண்டும் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபடவாய்ப்புண்டாம். எனது கட்சிக்காரர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். ஆகவே, மகாவலி அமைச்சை உங்களுக்குத் தரமுடியாது என்றார்.

பண்டா இஸமும், ஜே.வி.பி. இஸமும் ஒன்று. எந்த இந்தியா ஜே.வி.பியை அடித்ததோ, அந்த இந்தியாவின் ஆதரவோடு தமிழ் மக்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது. ஜே.வி.பியினர் சுத்தச் சந்தர்ப்பவாதிகள்.

பண்டா இஸத்தின் விவகாரக் கட்டம்தான் தற்போதுள்ள ஜே.வி.பி. ஆகும். ஜே.வி.பி. என்கின்ற யுத்தவெறியர் தமது யுத்தவெறியைக் கக்குகினறனர். இது மிகவும் ஆபத்தானது.

உலக அரசியலில் இப்படியொரு புதிய திட்டம் தோன்ற ஜே.வி.பி. இப்படியொரு பண்டா இஸத்தின் விவகார வடிவமாகத் தோன்றியுள்ளது.

பண்டா இஸத்தின் இன்னொரு கட்டம்தான் சுதந்திர முன்னணி ஜே.வி.பி. கூட்டு. இதைவிட, வேறு வார்த்தைகளில் இந்தக்கூட்டை விளக்கவும் முடியாது.

ஜே.வி.பியால் இந்தத் தேர்தலில் இத்தனை ஆசனங்களை எவ்வாறு பெறமுடிந்தது. ஜே.வி.பியின் ஆயுதப் போராட்ட வரலாறு, இந்தியா மூலம் தான் தோற்கடிக்கப்பட்டுவிடுவேன் என்ற நிலையை நன்கு உணர்த்தியது.

இந்தியாவுடனான விடுதலைப் புலிகளின் போராட்ட காலத்தில் ஜே.வி.பி. தீவிர இனவாதம் பேசி தனக்கு மக்களிடம் ஆதரவைப் பெற்றுக்கொண்டது.

ஜே.வி.பி. தீவிர இனவாதமும், தீவிர இந்திய எதிர்ப்பையும் பேசியது.



ஆனால், ஜே.வி.பி. தன்னுடைய மோசமான காலகட்டமெனத் தனது ஆயுதப் போராட்ட காலத்தைக் கணித்துக் கொண்டது.

இத்தகைய கணிப்பீடுகளின் பின்னர் நாடாளுமன்றத்துக்கூடான பாதையை ஜே.வி.பியினர் தேர்ந்தெடுத்துக்கொண்டனர். பண்டாரநாயக்காவிடம் கற்றுக்கொண்டார்கள். பின்னர் இனவாதத்திற்கு வந்தார்கள்.

அவ்வாறு நாடாளுமன்றப் பாதைக்கு ஜே.வி.பியினர் வந்துகொண்டிருந்தனர்.

**தொகுப்பு: கிருஷ்ணா**

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு இருந்த நிலைமை யு.என்.பியை எதிர்கொள்வதாக இருந்தது. இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பியின. வலையில் பிடிபட்டனர். தற்போது சுதந்திரக் கட்சியின் ஜே.வி.பியாக மாறும்நிலை தோன்றிவிட்டது. இப்போது இந்தநிலையில் சந்திரிகாவைக்கேட்டால் பிரதானமானது ஜே.வி.பி. என்றுதான் கூறமுடியும்.

ஜே.வி.பியினர் விரைவில் தோற்கடிக்கப்பட முடியாதளவுக்கு வெகுஜன ஊடகங்களையும், சாதனங்களையும் தங்கள் பக்கம் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இந்தப்போக்கு தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்ற போக்காகவே உள்ளது.

இலங்கையில் பண்டாரநாயக்கா குடும்பத்துக்கு வெளியே இருந்த ஒருவர் பிரதமராக பதவியேற்றுள்ளார். இந்த நிலைக்குக்காரணம் முன்கூறப்பட்ட விடயம்தான். இதன் மூலமாக புதிய ஒரு வம்சம் வர வாய்ப்புண்டாகியுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள கிளித்தட்டு விளையாட்டில் தன்னுடைய வம்சத்தை பறிகொடுத்து விட்டேனா என்பது சந்திரிகாவின் தற்போதைய பிரச்சினையாகவுள்ளது. சந்திரிகா இவ்வாறானதொரு நிலையை எடுக்காது விட்டிருந்தால் அவரது பரம்பரை காப்பாற்றப்பட்டிருக்கும்.

தற்போது நிகழ்ந்திருப்பது சுதந்திரக்கட்சிக்கு - அதன் பரம்பரை ஆட்சிக்கு - குழிதோண்டப்பட்டு விட்டது என்பதுதான். எனவே, இந்தப புதிய கட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒரு பலவீனமான நிலையில் அரசை அமைத்துள்ளது.

*(வளரும்)*

---

# மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,மே25

யாழ். மனோகராச் சந்திக்கு அருகில் அச்சகம் ஒன்றுக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மேற்படி அச்சகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் மோட்டார் சைக்கிளை வெளியில் நிறுத்திவிட்டு அச்சகத்தின் உள்ளே வேலை செய்துகொண்டிருந்தார் என்றும் - இரவு 11.30 மணியளவில் வேலை முடிந்து வீடு செல்வதற்கு வெளியே வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது தெரியவந்தது என்றும் - கூறப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிளின் உரிமையாளரான நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ப.ரவீந்திரன் யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முகமாலை பொலீஸ் சோதனைச் சாவடி மற்றும் குடாநாட்டிலுள்ள பொலீஸ் நிலையங்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-7)

---

# மாவனல்லையில் விபத்து 15 பேர் படுகாயம்

கண்டி,மே25

கண்டி போகம்பரைச் சிறைச்சாலை வாகனமும் கொழும்பில் இருந்து கண்டியை நோக்கி வந்துகொண்டிருந்த வான் ஒன்றும் நேருக்குநேராக மோதிக் கொண்டதில் 15 பேர் காயமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை மாலை மாவனல்லை கனேதென்ன என்னும் இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சிறைச்சாலை வாகனத்தில் கைதிகள் எவரும் இருந்திருக்கவில்லை என பொலீஸார் தெரிவித்தனர். படுகாயங்களுக்குள்ளான இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். ஏனையோர் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இச் சம்பவம் குறித்து கேகாலை, மாவனல்லை பொலீஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

---

## முன்னேசென்ற பஸ் நிறுத்தப்பட்டதால்

# 'பிறேக்' போட்ட மோ.சைக்கிளை பின்வந்த 'ஹை-ஏஸ்' மோதியது!

### - ஆனையிறவில் சனியன்று சம்பவம்; குடும்பஸ்தர் படுகாயம்!!

யாழ்ப்பாணம், மே25

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளை திடீரென நிறுத்தியபோது பின்புறமாக வந்த 'ஹைஏஸ்' வான் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விசுவமடு 10ஆம் கட்டையைச் சேர்ந்த கனகதுரை ரவி (வயது31) என்ற குடும்பஸ்தரே இச்சம்பவத்தில படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த பஸ் திடீரென நிறுத்தப்பட்டதாகவும், அதன் காரணத்தால் மோட்டார் சைக்கிளும் நிறுத்தப்பட்டபோதே பின்புறமாக வந்த 'ஹைஏஸ்' வான் இவரை மோதியதாகவும் கூறப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய 'ஹை - ஏஸ்' வான் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-9-6)

## மட்டுநகர் வீட்டினுள் ஆயுதம் சிக்கியது

மட்டக்களப்பு; கூழாவடி 8ஆம் குறுக்கு வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பொலீஸார் ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றையும் அதற்குரிய 50 ரவைகளையும் மீட்டுள்ளனர். இது தொடர்பாக ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்தத் திடீர் தேடுதல் நடத்தப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர். இது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் செல்வநாயகம் சுதர்சன் (வயது 24) என்பவரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர். திருமணமான இவருக்குப் பெண குழந்தை ஒன்றும் உள்ளது. இவர் இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.(எ-க)

## பராமரிப்பு வேலைகளை ஒட்டி சனியன்று சில பகுதிகளில் மின்தடை

குடாநாட்டின் சில பிரதேசங்களில் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை பராமரிப்பு வேலைகள் செய்யப்படவுள்ளதால் அன்றையதினம் மின்சாரம் தடைபட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, பல்கலைக்கழக மருத்துவபீடப் பிரதேசம், யாழ்.நகரப் பகுதி தவிர்ந்த மாநகரசபைப் பிரதேசம் ஆகியவற்றில் அன்றையதினம் காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாக பராமரிப்பு வேலைகள் முடிவுற்றால் மின்சாரம் உடனடியாக வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கீழுள்ள மயானங்களில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,மே25

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின கீழ் உள்ள 13மயானங்களில் இதுவரை 3மயானங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

மானிப்பாய் பிப்பிலி மயானம், நவாலி ஆரியம்பிட்டி மயானம், முளளானை (சூரியன் கலட்டி) கிராவட்டி மயானம் என்பன ஆறு நாள்கள் வேலைத்திட்டத்தின் கீழ் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

நாளை 26ஆம்திகதி முதல் அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை மேலும் இரண்டு மயானங்கள் துப்புரவு செய்யப்படவுள்ளன.

பண்டத்தரிப்பு பட்டினசபை ஊழியர்களும்-பண்டத்தரிப்பு கிராமசபை ஊழியர்களும் இணைந்து பிரான்பற்று விளாவெளி மயானத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யவுள்ளனர்.

மானிப்பாய் பட்டினசபை ஊழியர்களும் - மானிப்பாய் கிராம சபை உப -அலுவலக ஊழியர்களும் இணைந்து காக்கைதீவு எருக்கலம்பிட்டி மயானத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யவுள்ளனர்.

மேற்படி சிரமதானப் பணிகள் யாவும் சுகாதார மேற்பார்வையாளர் ஏ.யோகநாதன் தலைமையில் இடம் பெறும் (8-185)


**காலசுரபி இதழ்-IV**

**வெளியீட்டு விழா**

இடம்: புவியியற்றுறை மண்டபம்
யாழ்.பல்கலைக்கழகம்

காலம்: 26-05-2004 புதன்கிழமை

நேரம்: பி.ப.2.00 மணி (இ.நே.)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

வரலாற்றுக்கழகத்தினர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(32270) (26-21-16-18)



**கண்ணீர் அஞ்சலி**

சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆசிரியை
அருட்சகோதரி **அனற்றா**
அவர்களின் அன்புத் தந்தை
**சிந்தாத்துரை றோச்**

அவர்கள் 13.05.2004 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.
(32269) (26-21-16-18)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.



**ஈராண்டு நினைவுகளில்.......**

மண்ணுலகில் அறிமுகம்
15 - 01 - 1932



விண்ணுலகில் சங்கமம்
25 - 05 - 2002

**திருமதி தையல்நாயகி விநாயகமூர்த்தி**

**திதி:வைகாசித் திங்கள் பூரணை**

அம்மையே வாலா அம்மா அவனியில் நீவீர் இல்லை
எம்மை நீர் விட்டகன்று ஈராண்டு போனதாங்கே !
உம்மை நாம் நினைத்து இங்கே உருகியே சிந்தும் கண்ணீர்
எம்மை ஆழ் ஏகநாதன் ஏற்ற பொற்பதத்தில் வாழ்வீர் !

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

- உங்கள் நினைவில்:
கணவர்
அப்பாத்துரை விநாயகமூர்த்தியும்
குடும்பத்தினரும்.

முதலியார் வளவு.மாத்தனை ஒழுங்கை.
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

(32268)(43-21-16-18)


## ஓட்டோ உரிமையாளர்கள் சாரதிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே25

சுன்னாகம் கிளைச் சங்கத்திற்குட்பட்ட (16-சி.எச்) அனைத்து ஓட்டோ உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அளவெட்டி மகாசபைக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அளவெட்டி, மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களின் ஓட்டோ உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளைக் கலந்துகொள்ளுமாறு ஓட்டோ சங்கத்தின் தலைமையகம் அறிவித்துள்ளது. (10)




உ
சிவமயம்
பச்சிலைப்பள்ளி பிரதேச முகாவில்
திரியாய் அம்மன் ஆலய ஆண்டு உற்சவ
**வைகாசி திருக்குளிர்த்திப் பொங்கல் - 2004**

**அம்மன் அடியார்களே!**

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் வைகாசி மாதம் 15ஆம நாள் (28.05.2004) வெள்ளிக்கிழமை பகலும் இரவும் விசேட பூசைகளும் பகல் அன்னதானமும் இடம்பெறும்.

அடியார்கள் வருகைதந்து தங்கள் நேர்த்திகளைச் செய்து எம்பெருமாட்டியின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


- ஆலய பரிபாலன
சபையினர்.

*முகாவில்,*
*இயக்கச்சி.*

(சி-35160)(34-18-16)



# 33ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



## அமரர் வேலாயுதம் சிறிகாந்தன்

(ASBESTOS CEMENT COMPANY LTD
ஈவினை, T.O, உரிமையாளர் துரை கொமினிக்கேசன்,
பொருளாளர் - சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகசபை)

தாயின் மடியில்
19-08-1959

அம்பாள் அடியில்
23-04-2004

*அன்புத் தெய்வமே! அப்பாவே!*
*ஆறமுடியாமல் துடிக்கின்றோம் நிதமும்*
*இன்சொல் பேசி இனிதே வைத்திருந்தீர்*
*ஈர விழிகளுடன் இன்று நாம் இங்கே*
*உங்கள் சிரித்த முகம் மனக்கண்ணில் தோன்றுதே*
*ஊக்கமாய் உழைத்து எங்கள் நால் மணிகளையும்*
*என்றும் பார்போற்ற வாழவிட்டு*
*ஏனப்பா எமைப் பிரிந்து அவசரமாய் சென்று விட்டீர்*
*ஐயகோ நாம் இங்கே தினமும் துடிக்கின்றோம்*
*ஒரு குறையுமின்றி ஒற்றுமையாய் வாழ்ந்திருந்தோம்*
*ஓலமிட எமை விட்டு தென்திசைபால் சென்றுவிட்டீர்.*

எமது இல்லத்தில் இன்று (25-05-2004) செவ்வாய்க்கிழமையன்று நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சூராவத்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் பாதார விந்தங்களை அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குறிப்பு:- இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.**

*அம்மன் கோயிலடி,*
*சூராவத்தை, சுன்னாகம்.*
**T.P:0602-212762**
**222-5278**

((32543)(42-21-16-18)

என்றும் உங்கள் நினைவுடன்,
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# ஈராக்கிய திருமண வீட்டில் தாக்குதல்; வீடியோவை அமெ.ஊடகம் வெளியிட்டது

பக்தாத்,மே25

ஈராக்கில் திருமணம் ஒன்று நடந்து கொண்டிருந்த வேளையில் அமெரிக்க இராணுவம் நடத்திய குண்டுத்தாக்குதல் தொடர்பான வீடியோப் படத்தை அமெரிக்க செய்தி ஊடகம் ஒன்று வெளியிடடுள்ளது.

திருமணம் நடப்பதற்கு முன்பும் நடந்த பின்பும் எடுக்கப்பட்ட படங்கள் தொலைக்காட்சியில் காட்டப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் ஏறத்தாழ 40 பேர்வரை கொல்லப்பட்டதாக ஈராக்கியர் கூறியுள்ளனர். ஆனால், இந்தத் தாக்குதல் கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து நடத்தப்பட்டதாக அமெரிகக இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊடகம் வெளியிட்ட வீடியோப்படங்களில் திருமண வீட்டில் எடுக்கப்பட்ட படங்கள் காண்பிக்கப்பட்டன. குண்டுத் தாக்குதலுக்கு முன்னர் திருமண வீட்டில் காணப்பட்ட நபர்களில் பலர் உயிர்தப்பியிருப்பதும், பலர் மரணமாகியிருப்பதும் படங்களில் காட்டப்பட்டுள்ளன.



வீடியோப் படத்தில் காண்பிக்கப்பட்ட திருமணக் கார்

இதற்கிடையில் ஈராக் தொடர்பான நகல் தீர்மானமொன்று பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் மத்தியில் நேற்று விநியோக்கிக்கப்படவிருந்தது. திருமண வீட்டின் மீது அமெரிக்கப் படைகள் குண்டு வீசியதாக வந்துள்ள செய்திகளை அமெரிக்கர் மறுத்துள்ளனர். திருமண வீடு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என்றும், கிளர்ச் சியாளர்கள் நடத்திய தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் மட்டுமே நடத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிரிய எல்லைக்கருகில் மாக்கர் அல்-டீப் என்ற கிராமத்தில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமணத்தை வீடியோ படம் எடுப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த யாசர் ஷாவ்க்காட் அப்துல்லா என்பவரே இப்படங்களை எடுத்திருந்தார் என்றும் கொல்லப்பட்டவர்களில் இவரும் ஒருவர் என்றும் ஊடகத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் வாஷிங்ரனில் இது தொடர்பாக உரையொன்றை நிகழ்தத விருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

ஜுன்மாத இறுதியில் ஈராக்கியர்களிடம் எவ்வாறு அதிகாரம் மாற்றிக் கொடுக்கப்படும் என்பது பற்றி அதிபா தமது உரையில் கோடி காட்டிப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப-8)

# ஈராக், ஆப்கானில் கொல்லப்பட்ட கைதிகள் தொடர்பாக விசாரணை

வாஷிங்ரன்,மே25

ஈராக், ஆப்கானிஸ்தான் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயம் கைதிகள் கொல்லப்பட்டனர் என்பது தொடர்பாக அமெரிக்க இராணுவம் விசாரணை நடத்தியுள்ளது.

ஈராக், ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகளில் 37 கைதிகள் இறந்துள்ளனர். இவர்களில் எட்டுப்பேர் படுகொலை செய்யப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமெரிக்க இராணுவம் விசாரணை நடத்தியுள்ளது. குறிப்பாக சமீபகாலத்தில் மட்டும் 25கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

பெயர் கூற விரும்பாத அமெரிக்க இராணுவ உயரதிகாரி ஒருவர் கூறுகையில்:-

"விசாரணையின்போதோ அல்லது அதற்குப் பின்போ கைதிகள் அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். இதன் காரணமாக கைதிகள் இறந்துள்ளனர்" - என்றார்.

படுகொலை செய்யப்பட்ட எட்டுக் கைதிகளில் ஏழு பேர் ஈராக் சிறையில் கொல்லப்பட்டுள்ளனர். ஆப்கான் சிறையில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயம் இறந்தவர்களில் 23 கைதிகளின் இறப்புச் சான்றிதழ்களை அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ளது. இவர்களில் சிலர் துப்பாக்கியால் பலமுறை சுடப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் காயங்கள் காரணமாகவும் மூச்சுத் திணறல் காரணமாகவும் இறந்துள்ளனர் என்று இறப்புச் சான்றிதழில் கூறப்பட்டுள்ளது. (8)

# இந்திய அமைச்சரவை ஒரே பார்வையில்...

புதுடில்லி,மே25

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான புதிய அமைச்சரவை கடந்த 22ஆம் திகதி பதவியேற்றது. புதிய அமைச்சர்களின் விவரம் வருமாறு:

★ பிரணாப் முகர்ஜி - பாதுகாப்பு
★ அர்ஜுன் சிங் - மனித ஆற்றல் மேம்பாடு.
★ சரத் பவார் - விவசாயம், உணவு, சிவில் சப்ளை, நுகர்வோர் விவகாரம் மற்றும் பொதுவிநியோகம்.
★ லாலு பிரசாத் யாதவ் - ரயில்வே
★ சிவராஜ் வி.பாட்டீல் - உள்துறை.
★ ராம் விலாஸ் பஸ்வான் - ஸ்டீல், உரம் மற்றும் கெமிக்கல்ஸ்.
★ குலாம் நபி ஆஸாத் - நாடாளுமன்ற விவகாரம், நகர்ப்புற வளர்ச்சி.
★ ஜெய்பால் ரெட்டி - செய்தி மற்றும் ஒலிபரப்பு.
★ சிஷ்ராம் ஓலா - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு.
★ பி.சிதம்பரம் - நிதி
★ மகாவீர் பிரசாத் - சிறு தொழில், அக்ரோ மற்றும் ஊரகத் தொழில்.
★ பி.ஆர்.கிண்டையா - பழங்குடியினர் விவகாரம், வடகிழக்கு பிராந்திய மேம்பாடு.
★ டி.ஆர்.பாலு - சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை.
★ சங்கர் சிங் வகேலா - ஜவுளி
★ நட்வர் சிங் - வெளியுறவு.
★ கமல்நாத் - வர்த்தகம் மற்றும் தொழில்துறை.
★ ஹன்ஸ் ராஜ் பரத்வாஜ் - சட்டம் மற்றும் நீதி.
★ பி.எம்.சய்யீத் - மின்சாரம்.
★ ரகுவம்ச பிரசாத் சிங் - ஊரக மேம்பாடு.
★ பிரிய ரஞ்சன் தாஸ் முன்ஷி - நீர்வள ஆதாரம்.
★ மணி சங்கர் அய்யர் - பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு.
★ சுனில் தத் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு.
★ மீராகுமார் - சமூகநீதி.
★ கே.சந்திரசேகர ராவ் - கப்பல் போக்குவரத்து.
★ சிபு சோரன் - நிலக்கரி, சுரங்கம் மற்றும் கனிமம்.
★ ஏ.ராஜா - சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை.
★ தயாநிதி மாறன் - தொலைத்தொடர்பு மற்றும் தகவல்தொடர்பு.
★ அன்புமணி ராமதாஸ் - சுகாதாரம் மற்றும் குடும்ப நலன்.

**இணையமைச்சர் (தனிப்பொறுப்பு)**

★ சந்தோஷ் மோகன் தேவ் - கனரகத் தொழில் மற்றும் பொதுத்துறை.
★ ஜகதீஷ் டைட்லர் - வெளிநாடு வாழ் இந்தியர் நலம்.
★ ஆஸ்கர் பெர்னாண்டஸ் - புள்ளியியல் மற்றும் திட்ட அமுலாக்கம்
★ ரேணுகா சௌத்ரி - சுற்றுலா
★ சுபோத் காந்த் சகாய் - உணவுப் பதப்படுத்துதல்
★ கபில் சிபல் - அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்.
★ விலாஸ் முத்தெம்வார் - மரபுசாரா எரிசக்தி ஆதாரம்.
★ செல்ஜா - நகர்ப்புற வேலைவாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்பு
★ பிர.'.புல் படேல் - விமானப் போக்குவரத்து.
★ பிரேம்சந்திர குப்தா - கம்பெனி விவகாரம்.
★ இ.அஹமது - வெளியுறவு
★ சுரேஷ் பச்செளரி - பணியாளர், நாடாளுமன்ற விவகாரம்.
★ பி.கே.ஹாண்டிக் - பாதுகாப்பு, நாடாளுமன்ற விவகாரம்.
★ பத்மலட்சுமி - சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்.
★ தாசரி நாராயண் ராவ் - நிலக்கரி மற்றும் சுரங்கம்.
★ ஷகீல் அஹமது - தொலைத்தொடர்பு மற்றும் தகவல்தொழில்நுட்பம்.
★ ராவ் இந்தர்ஜீத் சிங் - வெளியுறவு.
★ நாராயண் பாய் ரத்வா - ரயில்வே.
★ கே.ரகுமான் கான் - உரம் மற்றும் இரசாயனம்.
★ கே.எச்.முனியப்பா - சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை
★ எம்.வி.ராஜசேகரன் - திட்டம்.
★ காந்திலால் பூரியா - விவசாயம், உணவு, சிவில் சப்ளை நுகர்வோர் விவகாரம் மற்றும் பொது விநியோகம்.
★ மாணிக்ராவ் காவிட் - உள்துறை.
★ ஸ்ரீ பிரகாஷ் ஜெய்ஸ்வால் - உள்துறை.
★ பிருதிவிராஜ் சவாண் - பிரதமர் அலுவலகம்.
★ தஸ்லிமுதீன் - கனரகத் தொழிற்சாலை மற்றும் பொதுத்துறை.
★ சூரியகாந்த பாட்டீல் - ஊரக மேம்பாடு.
★ எம்.ஏ.ஏ.பாதிமி - மனித ஆற்றல் மேம்பாடு.
★ ஆர்.வேலு - ரயில்வே.
★ பழனி மாணிக்கம் - தொழில் மற்றும் வர்த்தகம்.
★ எஸ்.ரகுபதி - உள்துறை.
★ ஏ.வேங்கடபதி - சட்டம் மற்றும் நீதி.
★ சுப்புலட்சுமி ஜகதீசன் - சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல்.
★ ஈ.வெ.கே.எஸ்.இளங்கோவன் - பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு.
★ காந்தி சிங் - மனித ஆற்றல் மேம்பாடு.
★ நமோ நாராயண் மீனா - சுற்றுச் சூழல் மற்றும் வனம்.
★ ஜெய் பிரகாஷ் நாராயண் யாதவ் - நீர்வள ஆதாரம்.
★ அகிலேஷ் சிங் - விவசாயம், உணவு மற்றும் சிவில் சப்ளை, நுகர்வோர் விவகாரம் மற்றும் பொதுவிநியோகம். (8)

# இந்தோனேஷியா செல்ல வேண்டாம் என ஆஸி.சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை

ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப்பயணிகள் பலர் இந்தோனேஷியா நாட்டிற்கு விரும்பிச் செல்கிறார்கள். அங்கு மேற்கத்திய நாட்டைச் சேர்ந்தவர்கள் மீது சில தீவிரவாத அமைப்புகள் குறிவைத்து தாககுதல் நடத்தி வருகின்றன. எனவே, இந்தோனேஷியா பயணத்தை தவிர்க்க வேண்டும் என்று சுற்றுலா பயணிகளுக்கு ஆஸ்திரேலியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாகக் கூறும்போது, இஸ்லாமிய தீவிரவாதிகள் வெளிநாட்டுத் தூதரகம், சர்வதேச பள்ளிகள், ஹோட்டல்கள், கோயில்கள், வணிக வளாகங்கள் ஆகியவற்றை குறிவைத்துத் தாக்குதல் நடத்த முயற்சி செய்து வருகிறார்கள் அதிலும் குறிப்பாக ஆஸ்திரேலியர்கள் தாக்கப்படுகிறார்கள். எனவே, இந்தோனேஷியா பயணத்தை ஆஸ்திரேலியர்கள் ரத்துச்செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# புஷ்ஷை விமர்சித்த படத்துக்கு கேன்ஸ் திரைப்பட விழாவில் விருது



விருதுடன் இயக்குநர் மைக்கேல் மூர்

பாரீஸ்,மே25

பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் நடந்த உலகத்திரைப்பட விழாவில் அமெரிக்க இயக்குநர் மைக்கேல் மூர் இயக்கிய 'பாரன்ஹீட் 9/11' படத்துக்கு 'தங்கப்பனை' விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் படம், 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு புஷ் மேற்கொண்ட நடவடிக்கைகளை விமர்சித்துத் தயாரிக்கப்பட்டு இருந்தது.

1956ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்போதுதான் முதல் முறையாக ஒரு செய்திப் படத்துக்கு 'தங்கப்பனை' விருது கிடைத்துள்ளது.

ஜப்பானியப் படமான 'நோபடிநோஸ்' படத்தில் நடித்த 14வயது யாசரா யூயா சிறந்த நடிகராகவும் 'க்ளீன்' படத்தில் நடித்த சீன நடிகை மாகி சியூங் சிறந்த நடிகையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிறந்த டைரக்டராக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டோனி காட்லிப் தேர்வு பெற்றார். 'எக்கைல்ஸ்' என்ற படத்துக்கு கதை வசனம் எழுதிய ஏக்னஸ் ஜாவோய்க்கும், அவரது காதலர் ஜீன் பியாரி பாக்ரிக்குக்கும் கிடைத்தது. (8)

# என் மீது கோபமாயிருக்கிறீர்களா? வைகோவிடம் வாஜ்பாய் உருக்கம்

"என் மீது கோபமாக இருக்கிறீர்களா?" என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவிடம் மனம் உருகிக் கேட்டார் முன்னாள் பிரதமர் வாஜ்பாய்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் மன்மோகன் சிங் தலைமையிலான புதிய அமைச்சரவை சனிக்கிழமை மாலை பதவியேற்றது. விழா முடிந்து தேநீர் விருந்து நடைபெறும் அரங்கிற்கு முக்கிய பிரமுகர்கள் சென்றனர்.

அங்குள்ள சோபாவில் அமர்ந்திருந்தார் வாஜ்பாய். வைகோ வந்ததைப் பார்த்ததும் உடனே எழுந்து அவரைக்கட்டி அணைத்துக்கொண்டார். அப்போது அவர்கள் இருவருக்கும் நடந்த உரையாடல் வருமாறு:-

*வாஜ்பாய்:-* என் மீது கோபமாக இருக்கிறீர்களா?

*வைகோ:-* எனக்கு என்ன கோபம்? எப்போதும் போல் உங்கள் மீது அன்பு வைத்திருக்கிறேன். தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது கூட வாஜ்பாய் மீது அளவுகடந்த அன்பும் மரியாதையும் வைத்திருக்கிறேன் என்றுதான் சொன்னேன்.

*வாஜ்பாய்:-* அது பற்றி நானும் கேள்விப்பட்டேன். நீங்கள் சிறையில் இருக்கும்போது நான் நேரில் வந்து பார்க்க ஆசைப்பட்டேன். ஆனால், மரபும் விதியும் அனுமதிக்கவில்லை. தொலைபேசியிலாவது பேசவிரும்பினேன். அதற்கும் வாய்ப்பு இல்லை என்று அதிகாரிகள் கூறிவிட்டார்கள்.

*வைகோ:-* ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இதுபற்றி என்னிடம் சொன்னார்.

*வாஜ்பாய்:-* என்றைக்குமே நான் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய நபர் வைகோ.

*வைகோ:* கடைசியாக நான் சிறையில் இருந்து எழுதிய கடிதம் உங்களுக்கு நினைவிருக்கிறதா?

*வாஜ்பாய்:* அந்தக் கடிதத்தை இன்றைக்கும் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

*வைகோ:* கடந்த 2002ஆம் ஆண்டு அமைச்சரவை விரிவாக்கத்தின்போது இதே சோபாவில் நீங்கள் அமர்ந்திருந்தீர்கள். உங்களுடன் நான் பேசினேன். அதன்பிறகு நேரடியாக அமெரிக்கா சென்றேன். என்னைக் கைதுசெய்ய தமிழகப் பொலீஸார் தயாராக இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். உடனே சென்னை திரும்பியதும் கைதுசெய்யப்பட்டேன். இப்போது இரண்டு ஆண்டுகள் கழித்து அதே இடத்தில் உங்களைச்சந்திக்கிறேன். அநேகமாக இந்தமுறை சிறைக்குப் போக மாட்டேன் என்று நினைக்கிறேன். - என்று தெரிவித்தார். (8)

# 4 ஆயிரம் கார்களுடன் மூழ்கியது கப்பல்!

சிங்கப்பூரின் தென்பகுதியில் எண்ணெய்க் கப்பலுடன் மோதிய தில், 4ஆயிரம் 'ஹூண்டாய்' கார்களை ஏற்றி வந்த கப்பல் ஒன்று கடலில் மூழ்கியது.

செந்தோஷா தீவிலிருந்து தென்மேற்காக 6கி.மீ.தூரத்தில் இவ் விபத்து கடந்த சனிக்கிழமை நடந்தது. இத்தகவலை சிங்கப்பூர் துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எண்ணெய்க் கப்பலான காமினேசன், பனாமாவைச் சேர்ந்தது. இதில் 2 லட்சத்து 79 ஆயிரத்து 949 தொன் கச்சா எண்ணெய் இருந்தது.

மோதுவதற்கு முன் இரு கப்பல்களுக்கும் எச்சரிக்கை விடப்பட்டதாகவும் இவ்விரு கப்பல்களும் தகவல் பரிமாற்றம் செய்துகொண்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் விபத்து நிகழ்ந்துவிட்டது.

ஹூண்டாய் கார்களை ஏற்றிவந்த கப்பலில் இருந்த 20 ஊழியர்களும் உயிருடன் மீட்கப்பட்டனர். விபத்துக்குப் பிறகு, எண்ணெய்க் கப்பலில் கசிவு ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# மதுபான நிறுவன விளம்பரத்தில் நடித்த வழக்கிலிருந்து வசிம் அக்ரம் விடுவிக்கப்பட்டார்

கராச்சி,மே25

மதுபான நிறுவனமொன்று தயாரிக்கும் கிரிக்கெட் உபகரணங்கள் தொடர்பான விளம்பரத்தில் நடித்தது தொடர்பான வழக்கிலிருந்து பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள தலைவர் வசிம் அக்ரம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மதுபான நிறுவன விளம்பரத்தில் நடித்தமைக்காக பொதுமக்களிடம் அக்ரம் மன்னிப்புக் கேட்கவேண்டும் எனவும், அத்துடன் நஷ்டஈடாகத தனக்கு 25 ஆயிரம் ரூபா பணம் தர வேண்டும் எனவும், பாகிஸ்தானியரான முகமட் பயஸ் என்பவர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இதுதொடர்பான விசாரணை அண்மையில் நடைபெற்றதையடுத்து அந்த வழக்கிலிருந்து அக்ரம் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் மதுபான விளம்பரத்தில் நடிக்கவில்லை என்பது உறுதியாகியுள்ளதால் மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை எனவும் அதுடன், வழக்குத் தாக்கல் செய்தவருக்கும் 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கத் தேவைய்யில்லை எனவும் நீதிபதி முஷீர் ராவ் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

மதுபான நிறுவனம் தயாரிக்கும் கிரிக்கெட் உபகரணங்கள் தொடர்பான விளம்பரத்தில்தான் அக்ரம் நடித்தாரே தவிர மதுபான விளம்பரத்தில் நடிக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் விளம்பரங்களில் கிளென் மக்ராத் (ஆஸ்திரேலியா), ஸ்ரீபன் பிளெமிங் (நியூஸிலாந்து), ஜோன்டிரோட்ஸ் (தென்னாபிரிக்கா), மேர்வின் டிலான் (மேற்கிந்தியா), அன்டி பிளவர் (சிம்பாப்வே), மார்வன் அத்தப்பத்து (இலங்கை), ஹர்பஜன்சிங் (இந்தியா)போன்ற கிரிக்கெட் வீரர்களும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (-10)

# தம்பாட்டி காந்திஜீ கழகம் உதைபந்தாட்டச் சம்பியன்

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தின் 61 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் துறையூர் மாவீரர்கள் ஞாபகார்த்தமாகவும் ஐயனார் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இறுதியாட்டத்தில் சென்சேவியர் விளையாட்டுக்கழக அணியும், தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணியும் மோதின.

தொடக்கம் முதல் இறுதிவரை இடம்பெற்ற ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் கோல் பெறுவதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அதனை இரு தரப்பினரும் தவறவிட்டனர்.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி ஒரு சில நிமிடங்களில் காந்திஜீ அணியினர் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது அணிக்கான முதல் கோலைப் பெற்றனர். இதனையடுத்து ஆட்டம்மேலும் சூடுபிடித்தது. இந்த நிலையில் சென சேவியர் அணியினர் எதிரணியினர் மேலும் கோல்பெறுவதைத் தடுக்கும் வகையில் தடுத்தாடினர். இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி காந்திஜீ அணியினர் மேலும் ஒரு கோலைப் பெற்று 2 - 0 என்ற கோல் கணக்கில் சம்பியன் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

இப்போட்டியின் சிறந்த வீரர்களாக சென்.சேவியர் அணியைச் சேர்ந்த சந்திரனும், காந்திஜீ அணியைச் சேர்ந்த ஜெயந்தனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இறுதியாட்டத்தைத் தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் ஈகைச் சுடரினை தீவக மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சிங்கண்ணா, வேலணைப் பிரதேச அரசியற்றுறைப் பொறுப்பாளர் யாழ். நம்பி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின திருவுருவப்படங்களுக்கு அவர்களது பெற்றோர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை - ஐயனார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகமும் கிரிக்கெட் போட்டியில் ஊர்காவற்றுறை அண்ணா விளையாட்டு கழகமும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன. (ஐ-5,190)


## இடமாற்றம்

CCS & GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

இல:302/1, நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் இயங்கி வந்த எமது நிறுவனம் தற்போது இல:119, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இயக்குனர்
CCS & GV

## நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையம்
## 59ஆவது ஆண்டு நிறைவு விழா
## காலம் 30.05.2004 ஞாயிற்றுக்கிழமை

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 59ஆவது ஆண்டு நிறைவு விழா 30.05.2004 ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளதனால் இதனை முன்னிட்டு 29.05.2004 சனிக்கிழமை நிலைய முன்றிலில் கீழ்க் குறிப்பிட்டுள்ள விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவிரும்புபவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் விளையாட்டுப்போட்டி விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 25.05.2004ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகள் விவரம்

| | பிரவேசம் |
|---|---|
| 1. 6 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கான மூன்று சில்லு சைக்கிள் ஓட்டம் (ஆண்,பெண்) | 5/= |
| 2. ஆண்டு 6,7.8இல் கல்வி பயிலும் மாணவருக்கான தடையோட்டம் | 5/= |
| 3. 10 வயதுக்குட்பட்டோருக்கான விநோத உடைப்போட்டி | 5/= |
| 4. மரதன் ஓட்டம் (ஆண்) 3மைல்கள் | 10/= |
| 5. வழுக்கு மரம் ஏறுதல் (ஆண்) | 10/= |
| 6. தலையணைச்சமர் (ஆண்) | 10/= |
| 7. மெதுவான சைக்கிளோட்டம் (ஆண்) | 10/= |
| 8. மெதுவான சைக்கிளோட்டம் (பெண்) | 5/= |
| 9. சங்கீதக்கதிரை (பெண்) | 5/= |
| 10. சைக்கிள் சங்கீதக்கதிரை (ஆண்) தனிநபர் | 5/= |
| 11. கயிறு இழுத்தல் (ஆண்) 7பேர் | 100/= |
| 12. விநோத உடை (வளர்ந்தோர்) | 10/= |

*விண்ணப்ப படிவங்கள் கிடைக்கும் இடங்கள்*

ஆ.கேசவன்
கேதீஸ் களஞ்சியம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர் மார்க்கட்,
கல்வியங்காடு.

பொ.கமல்நாதன்
சன்நெட்கொம்,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

ச.பிரேமதாசன்
லக்சுமி கொமினிகேசன்,
சட்டநாதர் கோயிலடி,
நல்லூர்.

சங்கிலியன் மன்றம்
ச.ச.நிலையம்,
நல்லூர்.

(சி-35179)(43-[illegible])


# விளையாட்டு

## நவிண்டிலில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மே25

தமிழீழ விளையாட்டுத்துறை, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் நவிண்டில கலைமதி விளையாட்டுக்கழகம் நடதத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில அல்வாய் விக்கிரமன்ஸ் வி.கழகமும் வல்வை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஐ-5-173)

## அணி விவரம் பதிவு

யாழ்ப்பாணம்,மே25

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் 14 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை பாடசாலை ரீதியாக நடத்தவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளின் அணிகள் தங்கள் பெயர், விவரங்களைக் கிரிக்கெட் சங்கத்தின் இணைப்பாளரான சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் அன்ரனி பிரான்ஸிஸிடம் பதிவுசெய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5,190)

## யாழ்.பாடசாலை மாணவருக்கு ரெனிஸ் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,மே25

இலங்கை 'ரெனிஸ்' சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு ரெனிஸ் பயிற்சி முகாம் ஒன்று யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றுவருகிறது.

சுமார் ஒரு மாதகாலம் இடம்பெறவுள்ள இப்பயிற்சி முகாமில் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி, சென்ஜோன்ஸ கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த வீரவீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர்.

இவர்களுக்கான பயிற்சிகளை இலங்கை ரெனிஸ் சங்கத்தின் வெளிமாவட்ட அபிவிருத்திப் பயிற்றுனர் கிறிஸ்தோபர் பாரதிராஜா வழங்குகின்றார். (ஐ-5-190)

## எல்லே போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே25

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் கலைவார நிகழ்வின் எல்லே போட்டிகள் நாளை புதன்கிழமை பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

காலை 6.30 மணிக்கு மூன்றாம் வருட அணிக்கும், முதலாம் வருட அணிக்கும் 7.30 மணிக்கு 4ஆம் வருட அணிக்கும் 2ஆம் வருட அணிக்கும் இடையே போட்டிகள் இடம்பெறும். (10-5)

# செய்திக்கொத்து

## தேக்கம் கன்றுகள் விநியோகம்

வலி.தெற்கு,மே25

புத்தூர் கமநலசேவை நிலையம் மற்றும் உடுவில் கமநல சேவை நிலையம் ஆகியவற்றில் தேக்கம் கன்றுகள விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தேக்கம் மரக்கன்றுகளைப் பெற விரும்புகின்ற பொது அமைப்புக்களும், பொதுமக்களும் அவற்றைப் பெற்றுக் கொளளலாம் என்று கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (10-152)

## மருந்துப் பொருள்கள் வந்தன

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 9 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

இதனால், இதுவரை காலமும் நிலவிவந்த மருந்துப் பொருள்கள் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும் வைத்தியசாலையில உள்ள கழிவகற்றும் பகுதிக்கான திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (10-[illegible])

## கற்கை நெறிகள் ஆரம்பம்

குடத்தனை,மே25

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையால் தொழில் கற்கை நெறிகள அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொடக்க விழாவில் முதன்மை விருந்தினராகத் தென்னிந்தியத் திருச்சபையின் பெண்கள் ஒன்றியத் தலைவி திருமதி விமலா ஜெபநேசனும் சிறப்பு விருந்தினராக அம்பன், குடத்தனை கிராமசேவையாளர் நல்லதம்பி தர்மகுலசிங்கமும் கலந்து கொண்டனர். (10-78)

## மருந்துகள் தட்டுப்பாடு

வலி.தென்மேற்கு,மே25

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பாடசாலை வைத்தியசேவை மற்றும் சுகாதார சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் சுகாதாரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் வேளைகளில் புழுவியாதி உள்ள மாணவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு பயன்படுத்தப்படும் மருந்துக் குளிகைகள் இல்லாமல இருப்பதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், மாணவர்களுக்கு முரசு கரைதல் போன்ற பல் வியாதிகளுக்கு வழங்கப்படும் விற்றமின்-சி, கல்சியம் போன்ற மருந்துக்குளிகைகளுக்கும் இங்கு தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகின்றது. (10-135)

## சுகாதார நிலையத்தில் திருட்டு

கச்சாயில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுகாதார நிலையத்திலிருந்த மின்குமிழ்கள் மற்றும் மின் உபகரணங்கள் என்பன அண்மையில் திருடப்பட்டுள்ளன.

நிலையத்தின் பின்பக்கக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள மேற்படி பொருள்களைத் திருடியதுடன் அலுவலகப் பாவனைப்பொருள்களையும் திருடிச்சென்றுள்ளனர்.(10-74)

## காந்தீய சேவா சங்கம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே25

அகில இலங்கை காந்தீய சேவா சங்கத்தைப் புனரமைக்கும் முயற்சிகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, சங்கத்தின் முன்னாள் அங்கத்தவர்கள் தமது தற்போதைய முகவரிகளைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு அதன ஸ்தாபகர்களுள் ஒருவரான சோ.க.தம்பிப்பிள்ளை கேட்டுள்ளார்.

சோ.க.தம்பிப்பிள்ளை, 'பிருந்தாவனம்' சிவபுரம், பூநகரி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.(10)

## தென்னை மீள்நடுகை

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் அழிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக மீள்நடுகைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கத் தென்னை உற்பத்திச் சபையின் வடமாகாண அதிகாரி ஜே.சத்தியேந்திரன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் இப்பிரதேசத்திற்குச சென்று பார்வையிட்ட பின்னர் தென்னை மரங்களில் 'மைற்' நோய் படித்திருப்பதைக் கட்டுப்படுத்தத் தமமுடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (10-117)

## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மே25

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில வாரத்தின் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரையும் ஆண், பெண் இருபாலாருக்குமான யோகாசன வகுப்புகள நடைபெற்று வருகின்றன. (10)

## ஒளிராத மின்குமிழ்கள்

வடமராட்சி கிழக்கு,மே25

பருத்தித்துறையில் வீதியோரத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் ஒளிராத காரணத்தினால் இரவு வேளைகளில் பாதசாரிகள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பல இடங்களில் பழுதடைந்துள்ள மின்குமிழ்கள் மாற்றியமைக்கப்படவோ அல்லது திருத்தப்படவோ இல்லை.

பருத்தித்துறை - நெல்லியடி பிரதான வீதியில் மின்குமிழ்கள் பொருத்தப்பட வேண்டிய இடங்களில மின் குமிழ்கள் பொருத்தப்படாமையினால் அதிக போக்குவரத்து உள்ள இவ்வீதியில் பல இடங்கள் இரவுநேரத்தில் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. (10-182)

## சமுர்த்தி வங்கியின் நடமாடும் சேவை

வட்டுக்கோட்டை,மே25

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவு தோறும் சமுர்த்தி வங்கியின் நடமாடும் சேவை இடம்பெற்று வருகிறது.

வட்டுக்கோட்டை, வழக்கம்பரை ஆகிய இரு சமுர்த்தி வங்கிகளும் சமுர்த்திப் பயனாளிகளின் நன்மை கருதி நடமாடும் சேவையினை நடத்தி வருகின்றன. இச்சேவை மூலம் பெருமளவு மக்கள் பயன்பெறுவர் என தலைமைக் காரியாலய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (10-161)

## புதிய சப்பரம் அமைப்பு

யாழ்ப்பாணம்,மே25

சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தையொட்டி 46 அடி உயரமான புதிய சப்பரம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. (10-139)

## புதிய பொறுப்பதிகாரி

கோப்பாய்,மே25

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனையின் புதிய பொறுப்பதிகாரியாக டாக்டர் திருமதி வி. இலக்ஷ்மணராமநியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் இதுவரைகாலம் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் திருமதி ரிராஜசேகரம் யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். (10-72)

## நீண்டகாலம் புனரமைக்கப்படாத வீதி

கொழும்புத்துறை,மே25

கொழும்புத்துறை விபுலானந்தர் வீதி நீண்டகாலமாகத் திருத்தம் செய்யப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதி 30 வருடங்களுக்கு மேலாகத் திருத்தம் செய்யப்படவில்லை எனவும் இதனால் பயணிகள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10-30)

## இராணுவ முகாம் அகற்றப்பட்டது

கோப்பாய்,மே25

இருபாலை - கற்பகப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இருந்த இராணுவ முகாம் அண்மையில் அகற்றப்பட்டுள்ளது.

இந்த முகாம் கடந்த 96 ஆம் ஆண்டு முதல் குறித்த இடத்தில் இருந்து வநதமை குறிப்பிடத்தக்கது. (10-72)

## சங்கானையிலும் விரைவில் இலங்கை வங்கியின் கிளை

வலிமேற்கு,மே25

இலங்கை வங்கியின் கிளை ஒன்று சங்கானையில் மிக விரைவில் அமைககப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையினை இலங்கை வங்கியினர் மேற்கொண்டுள்ளனர்.

சங்கானையில் இலங்கை வங்கிக் கிளை ஒன்றினை ஆரம்பிக்குமாறு பல சமூகமட்ட அமைப்புகள் பலகாலமாக வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது (10-175)

யாழ்ப்பாணம்



## ஆடை ஏற்றுமதிக்கான அமெ.கோட்டா ரத்தாகிறது!

# பல லட்சம் அரச, தனியார் ஊழியர்கள் வேலை இழக்கும் ஆபத்து உருவாகிறது

கொழும்பு,மே25

இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆடைகளை இறக்குமதிசெய்யும் அமெரிக்காவின் தாராள கோட்டா முறை ரத்துச்செய்யப்படலாம் என்ற தகவலும், திஸ்ஸதேவேந்திர சம்பள ஆணைக்குழு சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும பலலட்சம் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் மத்தியில் பெரும்பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஏற்பாடுகளினால் அரசதுறை ஊழியர்களுள் முப்பது வீதமானவர்களும், ஆடைத் தயாரிப்புத் துறையில் பணிபுரியும் சுமார் இரண்டரை லட்சம் ஊழியர்களும் தொழில் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுவரை கோட்டா முறையில் இலங்கையில் இருந்து தயாரிக்கப்பட்ட ஆடைகளை இறக்குமதி செய்து வந்த அமெரிக்கா இவ்வருட இறுதி முதல் இக்கோட்டா முறையை ரத்துச செய்ய தீர்மானித்து விட்டதாகத் தெரிகிறது. இதனால் சிறிய நடுத்தர அளவிலான ஆடைத் தயாரிப்பு நிலையங்கள் நேரடியாகப் பாதிக்கப்படும் ஆபத்துள்ளது.

இலங்கையில் தயாரிக்கப்படும் ஆடைகளில் பெரும்அளவிலானவற்றை அமெரிக்காவே இறக்குமதி செய்கிறது. இக்கோட்டா இங்குள்ள சகல ஆடை தயாரிப்பாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கபட்டது. அதனால் இலங்கையில் ஆடை உற்பத்தித் தொழில் பெருகிற்று.

பலலட்சம் பேர் பணிபுரியும் இத்துறை அமெரிக்க சந்தையை முற்று முழுதாக நம்பியே இங்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்காலத்தில் உலக சந்தையில் போட்டி அடிப்படையில் தரமான ஆடைகளை மட்டுமே இறக்குமதி செய்வதென அமெரிக்கா தீர்மானித்து விட்டதாகத்தெரிகிறது.

இப்பொழுது இந்தியா, சீனா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளும் தயாரித்த ஆடைகள் ஏற்றுமதியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக சந்தையில் போட்டியிடும் அளவில் நவீன முறையில் தரமான ஆடைகளைத் தயாரிக்கும் வாய்ப்பு இங்கு விரல் விட்டு எண்ணக்கூடிய சில நிறுவனங்களுக்கு மட்டுமே உண்டு.

இதனால் இங்கு நடுத்தர அளவிலான ஆடைத்தயாரிப்பு நிலையங்களும் அங்கு பணிபுரியும் பலலட்சம் ஊழியர்களும் நேரடியாகப் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தொழிலை நம்பி பலகோடி ரூபா முதலீடு செய்த சிறு உற்பத்தியாளர்கள் வங்கிகளில் பெற்றகடன்களையும் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்படும் என ஆடைத் தயாரிப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, அரச ஊழியர்களின சம்பள உயர்வு தொடர்பாக திஸ்ஸ தேவேந்திரா சம்பள ஆணைக் குழுவின சிபார்சு அப்படியே அமுல் செய்யப்படும் என அரசு தேர்தல் காலங்களின்போது உறுதி அளித்துள்ளது.

சம்பள உயர்வுகள் வழங்கப்படும்போது தேவைக்கதிகமாக இருக்கும் அரச ஊழியர்களுள் 30 வீதமானவர்களைப் பணிநீக்கம் செய்யவேண்டும். அதன் பின்னரே சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என திஸ்ஸ தேவேந்திரா சிபார்சுகள் திட்டவட்டமாக சுட்டிக் காட்டியுள்ளன.

இதனால் தற்போது கடமையில் இருக்கும் ஊழியர்களுள் கணிசமானோர் வீட்டுக்கு அனுப்பப்படலாம் என்ற பெரும் பீதி அரச ஊழியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக எதிர்க்கட்சி ஆதரவாளர்களின் பதவி, சேவை, தராதரம் போன்ற விவரங்கள் இரகசியமாகத் திரட்டப்படுவதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக ஜாதிக சேவக சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

தமது ஆதரவாளர்களுக்கு எதிராக அரசியல் பழிவாங்கலுக்கு வகைசெயயும் வகையில் திஸ்ஸ தேவேந்திரா ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த அரசு முயன்றால் நாடளாவியரீதியில் அரச ஊழியர்களின வேலைநிறுத்தப் போராட்டம் நடத்துபபடும். இதற்கான முன்னேற்பாடுகளும மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அந்தப் பேச்சாளர் கூறினார். (க)

## யோகர் சுவாமிகள் பரிசில் தினம்

யாழ்ப்பாணம்,மே25

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் யோகர் சுவாமிகள் ஞாபகார்த்த பரிசில் தினம் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி வ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## நன்றி நவில்கின்றோம்



அமரர்

**செல்லையா குமாரசாமி**

(சிற்றி ஹாட்வெயர் சாரதி)

கடந்த 19.05.2004 இல் இறையடி சேர்ந்த செல்லையா குமாரசாமி அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து அனுதாபம் தெரிவித்து சகல விதத்திலும் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் சிற்றி ஹாட்வெயர் உரிமையாளர் அவர்களுக்கும், ஊழியர்களுக்கும் எமது துயரில் பங்குகொண்டு துயர்பகிர்ந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனிஸ் நண்பர்களுக்கும் மற்றும் சகல வழி களிலும் உதவிய அன்புள்ளங்கொண்ட அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

27, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை, (32293)(37-40-13-17) - குடும்பத்தினர்.

## எம் நெஞ்சங்களில் தெய்வமாகி 6 ஆம் ஆண்டு நிறைவு நாள்

மண்ணில்
17
05
1951



விண்ணில்
31
05
1998

அமரர்

**காளிமுத்து தங்கவேல்**

திதி:பூர்வபக்க சஷ்டி 25.05.2004

ஆறு ஆண்டுகள் சென்றால் என்ன?
அறுபது ஆண்டுகள் சென்றால் என்ன?
எங்கள் இதயம் இயங்கும்வரை
உங்கள் பசுமையான நினைவுகள் என்றும் எம்முடனே!

வீரபத்திரர் ஒழுங்கை,
G.P.S. வீதி,
கல்வியங்காடு. (32294)(40-13-17)

மனைவி, மக்கள்
மருமகன், பேர்த்தி

## மரண அறிவித்தல்

### அமரர் பரமு கந்தசாமி

புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமு கந்தசாமி நேற்று (24.05.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பரமு - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் கதிர்காமு - அபிராமி ஆகியோரின் பாசமிகு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் கௌரிபாலன் (பாலன்), லோகேந்திரன் (லோகன்), கவிதா, குகபாலன் (குகன்), சாரங்கன், பவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாநிதி, சகாநந்தன் (சகா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுசன், தாட்சா, ஜெனா ஆகியோரின் அன்புப் பேரனும் சரசு, இராசையா, சின்னம்மா, குமாரசாமி, செல்லம்மா, இந்திரா, மகேசு, திலகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 12.00 மணியளவில் புத்தூர் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர்கிழக்கு,
புத்தூர். (32298)(40-12-13-37)

தகவல்
- குடும்பத்தினர்.

லக்ஷ்மி இணுவில்




தினசரி :11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(32115X12)

நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரபு, குஷ்பு, நெப்போலியன், செந்தில் நடித்த
மல்லிகை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
SLIVER
(சி34420)(12)

ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடாக
சூர்யா, ஈஷா, மாதவன்,
மீரா ஜஸ்மின், சித்தார்த், த்ரிஷா
மற்றும் பலர் நடித்த




காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(C/34517) (22)

நாகம்ஸ் சுன்னாகம்

5 ஆவது வெற்றி வாரத்தை நோக்கி
டொல்பி ஒலி அமைப்புடன்
விக்ரம், ஜோதிகா,
கபாலி, வடிவேல் நடித்த




காட்சிகள் தினசரி:
11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C34180)(22)

மே 7 ஆம் திகதி முதல் அருள் திரையிடும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களைப பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும 3 ரசிகர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள காத்திருக்கின்றன.
முதலாம் பரிசு துவிச்சக்கரவண்டி
இரண்டாம் பரிசு C.D பிளேயர்
மூன்றாம் பரிசு மேசை மின்விசிறி

26/05 முதல் எதிரி

## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து கிறிஸ்தோப்பர்

சில்லாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட சவரிமுத்து கிறிஸ்தோப்பர் நேற்று (24.05.2004) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி மாகிறேற்றின் அன்புக் கணவரும், கிளிவேட் வில்லியம்ராஜா (மாவட்ட புள்ளி விவரவியலாளர், யாழ்.கச்சேரி), புனிதம், பேரின்பம், திலகம், றஞ்சிதம் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), அருட்சகோதரி மேரி நிரோஷா (அ.கா.ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராணி, டொன்பொஸ்கோ (ஓய்வு பெற்ற நூலகர்), யோன் மரியதாஸ், ராஜமனோகரன், குலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஸ்மணன் (ஆசிரியர்), தமயந்தி (மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்), பாமதி, சுரேந்திரன் (ஆட்பதிவுத் திணைக்களம், யாழ்.கச்சேரி), லோஜினி (சித்த மருத்துவவைத்தியர்), நரேந்திரன் (மருத்துவபீடம்), சுதர்சன் (இணைப பாளர் I.S.B), சுதர்சினி (ஜேர்மனி), டஸ்னி (ஆசிரியை), நிதர்சன், கிருதர்சன் (குருமட மாணவன்), நிறோசன், விதூசன், றஜீவ், றொஸ்னி, நன்சி, லியோலினி, டிசாறா, டிலக்ஸ்மினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கத்திருப்பலி நாளை (26.05.2004) புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லாயன் விதி,
சில்லாலை,
பண்டத்தரிப்பு. (32300)(13-17-37)

தகவல்:
கிளிவேட் வில்லியம் ராஜா
(மகன்)

### திருமதி தம்பிப்பிள்ளை பாக்கியம்

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை பாக்கியம் 24.05.2004 அன்று காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் தெய்வேந்திரராணி (உரும்பிராய்), ராசதுரை (பிரான்ஸ்), செல்வநாயகம் (நீர்வேலி, பல நோ கூ.சங்கம்), தேவராசா (ஜேர்மனி), சிவராசா (ஜேர்மனி), அமுதாம்பிகை (ஜேர்மனி), யோகராசா (ஜேர்மனி), பாக்கியலட்சுமி ஆகியோரின் தாயாரும் சுந்தரலிங்கம், உருத்திரசீலி, பத்மராணி, நவந்தமணி, ஸ்ரீதேவி, சிவசுப்பிரமணியம், யோகா, நிமால்குமார் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (32296)(12-37-13)

தகவல்:
சு.தெய்வேந்திரராணி
(மகள்).

### திருமதி நவரட்ணம் கலாவதி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரட்ணம் கலாவதி நேற்று (24.05.2004) திங்கட்கிழமை கொழும்பில் இறைபதமடைந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் வேலுப்பிள்ளை நவரட்ணம் அவர்களின அன்பு மனைவியும் நவரட்ணம் மோகனதாஸ், நவரட்ணம் குமாரதாஸன ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2004) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இல.56/9, பூமகள் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூமகள் வீதி,
அரியாலை மேற்கு,
அரியாலை. (32297)(37-13-17)

தகவல்:
வே.நவரட்ணம் (கணவர்).

### முத்துச்சாமி பத்மநாதன்

(றிக்கோ ஹோட்டல் உரிமையாளர்)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி பத்மநாதன் 20.05.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி - சோதியம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் யசோதர விலாசினியின் அன்புக் கணவரும் தாட்சாயினி (லண்டன்), செந்தூரன் (சவுதி), ராகவேந்திரா (பரியோவான் கல்லூரி, மாணவன்) ஆகியோரின் பாசமிகு அப்பாவும் Dr.ஜெயக்குமாரின் (Oxford, லண்டன்) மாமனாரும் கனகேஸ்வரி, விமலநாதன், செல்வநாதன் (லண்டன்), தனலட்சுமி (லண்டன்), கமலநாதன் (அபீஸ்கோப்பி), கோணேஸ்வரநாதன் (கனடா), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் சிவபாதம் (இருபாலை), சந்திரமதி, புவனேஸ்வரி (லண்டன்), சபாநாதன் (லண்டன்), கலாதேவி, கலாஜோதி (கனடா), சிவச்சந்திரன் (லண்டன்) உருத்திரவிலாசினி (லண்டன்) துவாரகாவிலாசினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் செல்வரட்ணம் (லண்டன்), ராஜேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் தனுசியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி), சோபி (லண்டன்), சேரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ராஜேஸ்கண்ணா (சிலிங்கோ காப்புறுதி, கொழும்பு), நிருஜிதா, விஜிக்கிருஸ்ணா (பரியோவான் கல்லூரி மாணவன்), அபிசங்கர், ஜீவசங்கர் (பரியோவான் கல்லூரி மாணவர்), பிரியங்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அஞ்சனா, அருண்மைந்தன் (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் துஸ்யந்தன் (ஜேர்மனி), கிருசாந்தி (லண்டன்), பிரசாந்தி (லண்டன்), தாரணி, உமையாள், அவந்திகா (ஜேர்மனி) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'செந்தாமரை'
22/3A, விதானையார் வீதி,
சுண்டுக்குளி. (C-32192)(37-13-17)

தகவல்:
திருமதி ய.பத்மநாதன் (மனைவி),
ராகவேந்திரா (மகன்).

# இந்திய ,இலங்கை மீனவர்கள் நேற்று மன்னாரில் பேச்சு

மன்னார்,மே25

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக தென் இந்திய மீனவர்களின் குழுவொன்று நேற்று திங்கட்கிழமை மன்னாருக்கு வருகை தந்து பேச்சு நடத்தியுள்ளது.

மன்னாரில் இயங்கிவரும் 'வாழ்வோதயம்' என்ற அமைப்பின் ஏற்பாட்டில் தென் இந்திய மீனவர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளுக்கும், மன்னார் மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இச்சந்திப்பு நடைபெற்றது.

வாழ்வோதயம் அமைப்பின் இயக்குநர் அருட்தந்தை எஸ்யேசுராசா தலைமையில் நடந்த இச்சந்திப்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்புயோசப், மன்னார் மாவட்ட அரச அதிபர் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் பரப்புக்குள் அத்துமீறுவதால் தமக்கு ஏற்படும் பிரச்சினை குறித்து மன்னார் மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள் பிரஸ்தாபித்தனர். இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தென்னிந்திய மீனவர் பிரதிநிதிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இங்கு தங்கி நின்று பேச்சுக்களில் ஈடுபடுவர் எனக் கூறப்பட்டது. இறுதியில் எடுக்கப்படும் முடிவுகள் இரு நாடுகளின் அரசுகளிடமும் சமர்ப்பிக்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-9-12)

## உயர்பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது.

மக்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர அனுமதி அளிக்க வேண்டும் என உத்தரவு இடுமாறு மனுதாரர்கள் நீதிமன்றத்தை கோரி இருந்தார்கள்.

நேற்று விசாரணையில் பிரதிவாதி இராணுவத்தளபதியின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, உயர் பாதுகாப்பு வலயத்தின் ஒரு சில பகுதிகளில் பயிர் செய்ய ஒரு சாராருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த விடயத்தை ஆராய்ந்து எதிர்வரும் ஜுலை 26 ஆம் திகதி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்தது.

## கிழக்குக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறாத சமாதான வேளையில் - இத்தகைய பூரண நடவடிக்கைத் தளபதி ஒருவர் கிழக்கு மாகாணத்திற்கென தனியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஒரு பிரதேசத்தில் யுத்த நடவடிக்கைகள் மோசமான நிலையை எதிர்நோக்கும் சமயங்களில் உருவாக்கப்படும் ஒரு பதவி இப்போது சமாதான வேளையில் உருவாக்கப்பட்டிருப்பது பலரது புருவத்தையும் உயர்த்த வைத்திருக்கிறது.

2004 ஆம் ஆண்டில் ஆனையிறவு முகாம் புலிகள் வசம் வீழ்ந்து, முழு யாழ்ப்பாணத்தையும் அரச படைகள் இழக்கும் ஆபத்து ஏற்பட்டபோது, யாழ்.படைத்தளபதி பதவிக்கு மேல் வடக்குக்கான பூரண நடவடிக்கைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜானகப் பெரேரா நியமிக்கப்பட்டார். அப்போது அவரும் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்லவுக்கு அடுத்ததாக இரண்டாவது நிலையில் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-9-12)

## கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

பேராசிரியர் கு.தம்பையா வவுனியாவைச் சொந்த இடமாகக் கொண்டவர். இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். அவரது மனைவி ஆசிரியையாகப் பணியாற்றுகிறார். மட்டக்களப்பிலுள்ள பொது அமைப்புக்கள் பலவற்றிலும் உறுப்பினராக உள்ள பேராசிரியர் சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்ந்தவர்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா கிழக்கில் செயற்பட்ட காலப்பகுதியில் மட்டக்களப்பிலிருந்து இவர் வெளியேறியிருந்தார். கிழக்கு மீண்டும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னரே அவர் மட்டக்களப்புக்குத் திரும்பியிருந்தார். (ஒ-க-9-12)

## கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக் கலந்துரையாடினர்.

மிதிவெடிகள் அகற்றப்பட்டு வரும் பகுதிகளிலும் இடம்பெயர்ந்த மக்கள மீளக் குடியமரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அப்பகுதிகள் அமைந்துள்ளன என்று படையினர் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறு படையினர் தெரிவித்து வருவதனால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியிடம சுட்டிக்காட்டப்பட்டது.

இம்மக்களின் நிலை அறிந்து இதற்கான முடிவு எடுக்கப்பட வேண்டும் எனக் கண்காணிப்புக் குழுவுக்குச் சுட்டிக்காட்டிய மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தனர்.

## சிவாஜி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனர் என்றும் -

அப்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து அந்த இளைஞர்கள் அலுவலகத்துக்குள் புகுந்து சேதம் விளைவித்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் அலுவலகத்தில் இருந்த தொலைக்காட்சிப்பெட்டி, அலுவலக உபகரணங்கள் மற்றும் ஜன்னல் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

இது தொடர்பாக அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்ட யாழ்.பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையைச்சேர்ந்த பொ. ஈஸ்வரன் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். (ஒ-9)

## கருணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதும் -

புலிகளின் தலைமைக்குத் தெரிய வந்திருப்பதாக அதனுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இப்படி வழிநடத்தப்பட்டு புலிகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கென தயார்படுத்தப்பட்ட மூவர் புலிகளின் பக்கம் வந்து முழுவிவரங்களையும் ஒப்புவித்துவிட்டனர் என்றும் தெரிகின்றது. அவர்கள் மூவரும் தாமாகப் புலிகளிடம் வந்து சேர்ந்தார்களா அல்லது புலிகள் வைத்த வலையில் சிக்கினார்களா என்பது தெரியவரவில்லை. அவர்கள் கொடுத்த தகவலகளின் படி கருணா பெயரில் தாக்குதல்களை வழிநடத்தும் படை நடவடிக்கை விவரங்களை புலிகள் முற்றாக அறிந்து கொண்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

கடந்த வியாழன் இரவு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான ஆலங்குளம் பகுதியில் நடத்தப்பட்ட ஒரு குண்டுத் தாக்குதலையும் அதைத் தொடர்ந்துமேற்கொள்ளப்பட்ட இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகத்தில் புலிப்போராளி ஒருவர் உயிரிழந்ததும இருவர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இந்தத் தாக்குதல் இலங்கை இராணுவத்தின் உதவியோடுதான் மேற்கொள்ளப்பட்டது என்று புலிகளின் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இகௌசல்யன் பகிரங்கமாக குற்றஞ்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் புலிகள் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்துள்ளனர்.

கிழக்கில் கருணா குழுவின் பெயரால் புலிகளுக்கு எதிரான அதிரடித் தாக்குதல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெற்று வரும் நிலையில் -

இத்தாக்குதல்கள் சம்பந்தமான புதிய பல விவரங்கள், உள்வீட்டுத் தகவல்கள் போன்றவை புலிகளின் தலைமையிடம் சிக்கியுள்ள பின்னணியில் -

இவை தொடர்பாக புலிகளின் தலைமை அடுத்து மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை என்னவென்பது தெரியவில்லை.

(க)

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடகாலம் வரை உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும். ஒரு வருடம் கழிந்தபின் அது நிறுத்தப்படும். இது நாடளாவிய ரீதியில் நடைமுறையில் உள்ளது.

இதன் பிரகாரமே தற்போது பலருக்கும் உலர் நிவாரணம் நிறுத்தப்படுகின்றது.

கடந்த 96ஆம் ஆண்டிலிருந்து எவ்வித கொள்கைகளும் இன்றி முன்னைய அரசுகளால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 74 ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுவந்தது.

யாழ் குடாநாட்டிலுள்ள அதி உயா பாதுகாப்பு வலயப பிரச்சினைகளால சுமார் 17 ஆயிரத்து 541 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாது பல்வேறு இடர்களை எதிர் நோக்குகின்றன.

இவர்களுக்கு தற்போது வழங்கப்படும் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படமாட்டாது. தொடர்ந்தும் வழங்கப்படும் - என்றார் அவர்

இதேவேளை -

விடுதலைப் புலிகளுக்கும் - அரசிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் இதுவரை 42 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ரூபாவைப் பெறத் தகுதி பெற்றுள்ளன.

அவற்றில் 25 ஆயிரத்து 22 குடும்பங்களுக்கு கொடுபபனவாக மொத்தம் 31 கோடி 50 லட்சம் ரூபா (315 மில்லியன்) வழங்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களுக்கும் மிகவிரைவில் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம் பிள்ளை, யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சிவசுவாமி, தலைமைச் செயலக உதவி அரச அதிபர் வீவீரபத்திரபிள்ளை மற்றும் உதவித திட்டப் பணிப்பாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஐ-5-ரி)

M.S. Office
திகழ் K.K.S. வீதி, இணுவில்.

மது கல்வி நிறுவனம்
டச்சவீதி, இருபாலை, கோப்பாய்.
Spoken English With Grammar
Britto
ஆரம்பம்: 01-06-2004
செவ்வாய்க்கிழமை 11.30
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
- நிர்வாகி.
(32292)

SUBRA (14)
சித்தன்கேணி
ஆங்கிலம் கற்க அனுமதி பெற்று விட்டீர்களா? அனுமதிக்கு முந்துங்கள
SPOKEN ENGLISH
and
GRAMMAR
by . BRITTO
ஆரம்பம்: 26.05.2004
புதன் காலை. 7.00 மணி
(C/35020)

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 03.06.2004
SPOKEN ENGLISH WITH GRAMMAR
பிரபல ஆசிரியர்:
BY: MR.B.JOTHY
- மிக இலகுவான முறையில் பேச்சுப் பயிற்சி
- வீட்டில் சுயமாகப் பேச்சுப் பயிற்சி பெற ஏற்ற முறையில் தமிழ் உச்சரிப்புடன் கூடிய கைநூல்கள்
- தெளிவாக எழுதக்கூடிய விதத்தில் மிக இலகுவான தமிழ் விளக்கத்துடன் ஆரம்பத்திலிருந்து இலக்கணம் கற்பிக்கப்படும்.
வகுப்புகள் நடைபெறும் இடங்கள்:
பருத்தித்துறையில் OXFORD ENGLISH ACADEMY, P.K. LANE, POINTPEDRO, ஆரம்பம:03.06.2004, நேரம்- பி.ப.4.00 மணி
சாவகச்சேரியில் GNANOTHAYA ACADEMY, சங்கத்தானை, ஆரம்பம:03.06.2004, நேரம்- பி.ப.2.30 மணி
நெல்லியடியில் MATHS CENTRE, மத்திய மகாவித்தியாலய வீதி, ஆரம்பம:03.06.2004, நேரம்- பி.ப.5.00 மணி
(32287)(12)

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தை கணனியுகத்துடன் இணைத்துக்கொள்ள எதிர்வரும் மே 27 வியாழனன்று
உதயன நாளிதழில் வெளிவரும்.
யாழ். மாவட்டத்தின் முன்னணி கணனி கல்வி நிறுவனங்களின
'கணனி கற்கை நெறி' சிறப்பு மலருடன் இணையுங்கள்!
(C/35182)(40-)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
C.C.S & GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
எமது நிறுவனத்தால் அனுப்பப்பட்ட 1500/= பெறுமதியான Discount Voucher கிடைத்த A/L மாணவர்களுக்கான அனைத்துக் கணனிப் பாடநெறிகளும் ஆரம்பம்.
காலம் : 04.06.2004, 06.06.2004 & 08.06.2004
நேரம் : மு.ப.10.00, பி.ப. 03.30 (புதிய நேரம்)
இவ் 1500/= Voucher கிடைக்காத A/L மாணவர்கள் உடன் எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்க.
தொடர்புகளுக்கு:
No. 119, Pointpedro Road, Nallur, Jaffna.
(32275)(40) T.P:0777-279034

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் பரமானந்தம்

அச்சுவேலி தெற்கு, பயிற்றோலையைச் சேர்ந்த நாகலிங்கம் பரமானந்தம் நேற்று (24.05.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பயிற்றோலையைச் சேர்ந்த நாகலிங்கம் -சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும் வசந்தமலரின் பாசமிகு கணவரும் கிருஸ்ணானந்தன் (ஆஸ்திரேலியா), குந்தகை (லண்டன்), கயல்விழி, பூங்குழலி, பானுசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம பின்னர் அறிவிக்கப்படும்.

*பயிற்றோலை,*
*அச்சுவேலி* (சி-35194)(37-13)

தகவல்:
ப.பானுசாந்தன் (மகன்).

யாழ் நகரில் தகவல் தொழில் நுட்ப சேவையில் புதிய உதயம்
FOCUS NET CAFE & GAME ZONE
★ அதிவேகத்தில் இணையத்தளங்களைப் பார்வையிட (Speed Net Browsing)
★ NET 2 PHONE சேவைபெற
★ VOICE & WEB CAM CHAT செய்ய
★ COMPUTER GAMES விளையாட
இன்னும் ★ VCD, Audio CD, Software CD களை பெற்றுக்கொள்ள
Printing, Scaning, CD Writing, Typesetting சேவைகளிற்கு
யாழ்.மண்ணில் புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய நிறுவனம்.
Net Browsing செய்வதற்கு இன்று மட்டும் முதல் 30 நிமிடங்களுக்கு கட்டணம் இலவசம்
Focus Net Cafe
120, அரசடி வீதி
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக), யாழ்ப்பாணம்
T.P.021-222-7285
(32295)(40)

கம்ப்யூட்டர் ∴போக்கஸ்
கணனிச் சஞ்சிகையின் ஏப்ரல் மாத இதழ் யாழ்.குடாநாடெங்கும் பரபரப்பான விற்பனையில்.
உங்கள் தகவல் தொழில்நுட்ப அறிவை மேன் மேலும் உயர்த்த உங்கள் வீடுகளில் இருக்க வேண்டிய அறிவுப் பொக்கிஷம்!

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.